# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008. ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெறற்க் கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 11/2006

**இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கின் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்படும்" தேதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையைத் தாபித்தல்

**2.** (1) கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இவ்வதிகாரசபை 3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது அமைச்சரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையையும் பொது

2 –PL 002929 – 1,250 (2008/04)

இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரால் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

பணிப்பாளர் சபை.

3. (1) அதிகாரசபையின் நிர்வாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு என்பன பின்வருவோரைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரின் அபிப்பிராயப்படி கப்பற்றொழில், துறைமுகத் தொழிற்பாடுகள் அல்லது கடல்சார் தீழ்ப்புத் தடை தொடர்பிலான துறைகளில் அனுபவமுள்ளவர்களும் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளவர்களுமான, அமைச்சரால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் ;

(ஆ) பின்வரும் ஏழு பதவிவழி பணிப்பாளர்கள் :—

(i) சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(iv) கடல்சார் தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(v) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ;

(vi) இலங்கைக் கடல்சார்படையின் ஏவுநராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி ;

(vii) அதிகாரசபையின் பொது முகாமையாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள்.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்களுள் ஒருவரை அதிகாரசபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும். (இவர் இதன் கத்து பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்).

4. (1) ஆளொருவர் – உறுப்பினரொருவராக நியமிக்கப்படாமைக்கான தகைமையீனங்கள்.

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஒரு உள்ளூரதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ; அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவியலாதவராக அல்லது வங்குரோத்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருப்பின் ; அல்லது

(உ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்.

அத்தகைய ஆள் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதினின்று அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதினின்று தகைமையிழந்தவராதல் வேண்டும் ; அல்லது

(2) மூன்றாம் பிரிவின் முறையே (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் தவிசாளரும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று ஆண்டு

களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவர்களாதலும் வேண்டும்.

(3) அமைச்சர், 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரை —

(அ) அவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள வாறான எவையேனும் தகைமையீனங்களுக்கு அமைந்தவராகவரின் ;

(ஆ) அவர், அமைச்சரின் அபிப்பிராயப்படி ஏதேனும் உடல் ஊனத்தின் அல்லது சித்த சுவாதீனமில்லாமையின் காரணமாக நிரந்தரமாக அவரது கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றவராகவரின் ; அல்லது

(இ) அவர், அமைச்சரின் அபிப்பிராயப்படி அதிகாரசபைக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் சாத்தியமுள்ள ஏதேனும் செயலைப் புரிவாராயின் ;

அவரைப் பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

(4) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அதிகாரசபையின் தவிசாளரின் அல்லது மூன்றாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் வேறு எவரேனும் உறுப்பினரின் பதவி வறிதாகும்பட்சத்தில் அல்லது முற்போந்த உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படும்பட்சத்தில் அமைச்சர் சபையின் விதப்புரையின்மீது வேறோர் ஆளை அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிப்பதற்கென நியமிக்கலாம்.

(5) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அதிகாரசபையின் தவிசாளர் அல்லது மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக மூன்று மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராயிருப்பின் விடயத்திற்கேற்ப தவிசாளராக அல்லது உறுப்பினராக அவரது இடத்தில் பதிற்கடமையாற்றுவதற்கென அமைச்சர் சபையின் விதப்புரையின்மீது வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தவிசாளர் அல்லது மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் உறுப்பினர் அமைச்சருக்கு அதன் பொருட்டு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் ஏதேனும் நேரத்தில் விடயத்திற்கேற்பத் தவிசாளராக அல்லது உறுப்பினராகத் தமது பதவியைத் துறக்கலாம்.

(7) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் தவிசாளருக்கும் மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் நிதி அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களின் படியும் அதிகாரசபையின் நிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட லாம்.

(8) அதிகாரசபையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்த கைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து, சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற் சமுகமா யிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென உறுப்பினரொருவரைத் தெரிவுசெய் தல் வேண்டும்.

(9) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(10) சபை அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(11) சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு ஒரு தடவையாவது அதிகாரசபையால் தீர்மா னிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(12) சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உளது அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்தினால் மாத்திரம் அதன் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்ற தாகக் கருதப்படுதலாகாது.

அதிகாரசபையின் இலச்சினை.

**5.** (1) அதிகாரசபையின் இலச்சினை –

(அ) தவிசாளரின் அல்லது அதன்பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையி லன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக் கப்படுதலாகாது. இவர்களிருவரும் தாங்கள் சமுகமா யிருந்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) சபை, எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் அதிகார சபையின் இலச்சினை பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனங்க ளினதும் ஆவணங்களினதும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

## பாகம் II

### அதிகாரசபையின் பணிகள்

அதிகாரசபையின் பணிகள்.

**6.** அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண் டும் :–

(அ) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிக ளினதும் ஏற்பாடுகளை பயனுறுதியுடனும் திறனாயாக வும் நிர்வகித்தலும் நடைமுறைப்படுத்துதலும் ;

(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களிலும் அதன் கரையிலும் கப்பல் சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலுமிருந்தும் எழும் தீழ்ப் பைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் கட்டுப்படுத்து வதற்கும் முகாமை செய்வதற்குமான செயற்திட்ட மொன்றை வகுத்தலும் நிறைவேற்றுதலும் ;

(இ) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்திலும் அதன் கரைமுனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப்படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முகவராண்மைகளுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ;

(ஈ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளை அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தையும் அதன் கரைமுனங்கையும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தையும் ஏதேனும் எண்ணெயால், தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்களினால் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகளால் ஏற்படுத்தப்படும் ஏதேனும் தீழ்ப்பிலிருந்து முகாமை செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் பேணிக்காப்பதற்குமான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ;

(உ) ஏதேனும் எண்ணெய்க்கு, தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும் பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல் ;

(ஊ) இலங்கை அரசாங்கம் ஏற்றங்கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கியுள்ள அல்லது அங்கீகரித்துள்ள அல்லது ஏற்றங்கீகரிக்கக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, இணங்கக்கூடிய அல்லது அங்கீகரிக்கக்கூடிய கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும் இயைபான நியமங்களையும் கடைப்பிடிப்பதனை விதந்துரைத்தல் ;

(எ) தேசிய எண்ணெய்த் தீழ்ப்பு எதிர்பாரா நிகழ்வுத் திட்டத்தை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும் ;

(ஏ) பெற்றோலியம் அல்லது அது தொடர்பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற்கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களினதும் சேவை துணை ஒப்பந்தக்காரர்களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும் ஒழுங்குபடுத்தலும் கண்காணித்தலும் ;

(ஐ) கடல்சார் சூழலைப் பேணிக்காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல் ;

(ஒ) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

அதிகாரசபையின் தத்துவங்கள்.

7. அதிகாரசபை பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் :—

(அ) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புக்களை அல்லது வேறு கடலோர வலயத்தை, கப்பல் சார்ந்த செயற்பாட்டிலிருந்து அல்லது கடற்கரைசார்ந் கடலோரம் தொடர்பான செயற்பாட்டிலிருந்து எழும் ஏதேனும் தீழ்ப்பிலிருந்து பயனுறுதியுடன் பாதுகாத்தலும் பேணிக்காத்தலும்;

(ஆ) ஏதேனும் கப்பல்சார்ந்த செயற்பாட்டிலிருந்து அல்லது கடற்கரை சார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டிலிருந்து எழும் ஏதேனும் தீழ்ப்பு தொடர்பில் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளுதலும் சட்ட நடவடிக்கைகளைத் தொடர்தலும் ;

(இ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு கடலோர வலயத்தில் அதன் கரை முனையில் அல்லது இலங்கையில் கரையோர வலயத்தில் தீழ்ப்பைத் தடுக்கும் நோக்கத்திற்குக் கடல் மார்க்கமாக எண்ணெய்யை ஏற்றிச் செல்லல், கப்பலுக்கு எண்ணெய் நிரப்புதல் ஆகிய எல்லாத் தொழிற்பாடுகளையும் மேற்பார்வைசெய்தல் ;

(ஈ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(உ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதல் ;

(ஊ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் நேரடியாகவோ அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(எ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட எல்லா அல்லது எவையேனும் தத்துவங்கள் எவருக்குக் கையளிக்கப்படலாமோ அந்த பிரயோகிக்கும் நோக்கத்திற்கு எவரேனும் ஆளை பெயர்குறித்து அல்லது பதவி குறித்து நியமித்தல் ;

(ஏ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எதேனும் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் கணக்குகளைத் ஆரம்பித்தலும் தொழிற்படுத்துதலும் பேணுதலும் ;

(ஐ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனெடுத்தல் ;

(ஒ) இலங்கையிலும், வெளிநாடுகளிலுமுள்ள மூலவளங்களிலிருந்து அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை கொடைகளாகவும் நன்கொடைகளாகவும் இறுதி விருப்பாவணக் கொடைகளாகவும் எற்றுக் கொள்ளுதலும் பெற்றுக் கொள்ளுதலும் அவற்றை அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றும் நோகத்கதிற்குப் பயன்படுத்துதலும் ;

(ஓ) அதிகாரசபையின் அலுவல்களின் முகாமைத்துவம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் ;

(ஔ) அதிகாரசபையால் வழங்கப்பட்ட எவையேனும் சேவைகளுக்கு எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து கட்டணங்கள் அறவிடுதல் ;

(ங) அதிகாரசபையில் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் இலங்கைத் துறைமுகங்களுக்கு வருகைதரும் எல்லாக் கப்பல்களிடமிருந்து கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல் ;

(ச) அதிகாரசபையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அல்லது வேறுவகையில் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

தத்துவங்களைக் கையளித்தல்.

**8.** இச்சட்டத்தால் அதிகாரசபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தை அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது வேறு எவரேனும் பெயர்குறித்துரைக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது இச்சட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கென நியமிக்கப்படும் வேறு எவரேனும் ஆளுக்குக் கையளிப்பது அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

பரிசோதனையையும் பணிப்பிட்டையும் செய்வதற்கான தத்துவங்கள்.

**9.** (1) அதிகாரசபையால் ஏதேனும் தத்துவம் பிரயோகிக்கப்படுதல், ஏதேனும் பணி புரியப்படுதல் அல்லது ஏதேனும் கடமை நிறைவேற்றப்படுதல் தொடர்பில் அல்லது அதற்கு இடைநேர்விளைவான ஏதேனும் கணிப்பீட்டை, பரிசீலனை அல்லது புலனாய்வை செய்வதற்காக, நாளின் ஏதேனும் நியாயமான நேரத்தில் எண்ணெய் நிறுவுகைகள் உட்பட ஏதேனும் காணியில் அல்லது எவையேனும் வளவுகளினுள் பிரவேசிப்பது அதிகாரசபைக்கு அல்லது அதன் பொருட்டு பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரசபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பினுள் அல்லது வேறு கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் ஏதேனும் கருவி அல்லது குழாய் இணைப்பு தொடர்பின் அதிகாரசபையின் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் ஏதேனும் பணியைப் புரிதல் அல்லது

ஏதேனும் கடமையை நிறைவேற்றுதல் தொடர்பாக அல்லது அதன் இடைநேர்விளைவாக ஏதேனும் கணிப்பீட்டை, பரிசோதனையை அல்லது புலனாய்வை மேற்கொள்வதற்காக, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளருடனான கலந்தாலோசனையுடன் ஏதேனும் நியாயமான நேரத்தில் விதித்துரைக்கப்பட்ட முறையில் கரைக்கப்பாலுள்ள ஏதேனும் நிறுவுகையைப் பார்வையிடுவதற்காக ஏதேனும் கப்பலில் ஏறுவது அதிகாரசபைக்கு அல்லது அதன் பொருட்டு அதிகாரசபையால் பொதுவாக அல்லது விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென ஏதேனும் நிலையான அல்லது நடமாடும் மேடையில் அல்லது வேறு ஏதேனும் இயைபான நிறுவுகையில் ஏறுதல் அல்லது எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்தல் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) அத்தகைய கணிப்பீடுகளை, பரிசோதனைகளை அல்லது புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு அப்போதைக்கு விடயத்திற்கேற்ப அத்தகைய கரைக்கு அப்பாலுள்ள நிறுவுகைக்கு, கருவிக்கு அல்லது குழாய் இணைப்புக்குப் பொறுப்பாயுள்ள அலுவலர்களால் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு எல்லா உதவிகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையால் அதன்பொருட்டு பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் -

(அ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்திலுள்ள அதன் கரை முனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலுள்ள அல்லது அத்தகைய நீர்ப்பரப்பினுட் பிரவேசிக்கவுள்ள ஏதேனும் கப்பலின் சொந்தக்காரரை, தொழிற்படுத்துநரை, தலைவனை அல்லது முகவரை -

(i) கப்பலின் நிலைமை, அதன் பொறித்தொகுதி மற்றும் உபகரணம்;

(ii) அதன் கப்பற்சரக்கின் தன்மை அல்லது தரம் ;

(iii) அத்தகைய கப்பலிலுள்ள கப்பற்சரக்கினதும் எரிபொருளினதும் தன்மை, கப்பலின் கப்பற் சரக்கும் எரிபொருளும் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளமுறை மற்றும் அமைவிடம் ; அத்துடன்

(iv) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு கப்பல் அல்லது அதன் கப்பற் சரக்கு தொடர்பாக அதிகாரசபையால் தேவைப் படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் ;

தொடர்பிலான தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(ஆ) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளருடனான கலந்தா லோசனையுடன், இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக ளிலுள்ள அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கிலுள்ள அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் உள்ள ஏதேனும் கப்பலில் ஏறலாம் என்பதுடன் அத்தகைய கப்பலின் சொந்தக் காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவை யேனும் ஒழுங்குவிதிகளால் விதிக்கப்பட்ட தேவைப் பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளாரா என்பதனை அவர் தீர்மானிப்பதனை இயலச்செய்வதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய பரிசோதனைகளையும் சோதனைகளையும் மேற்கொள்ளலாம் ; அல்லது

(இ) கப்பலொன்று தொடர்பில் ஒரு கப்பலின் சொந்தக்கார ரால், தொழிற்படுத்துநரால், தலைவனால் அல்லது முகவரால் வைத்திருக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் பதிவேட்டைப் பார்வையிடலாம் என்பதுடன் ஏதேனும் அத்தகைய பதிவேட்டில் உள்ள ஏதேனும் பதிவைப் பிரதிபண்ணுவிக்கலாம் என்பதுடன் இப்பந்தியின்கீழ் பண்ணப்பட்ட பிரதியை மூலப்பிரதி யின் ஓர் உண்மைப்பிரதி என அத்தாட்சிப்படுத்துமாறும் பதிவேட்டிற்குப்பொறுப்பான ஆளை தேவைப்படுத்தலாம்;

(ஈ) ஏதேனும் கரைக்கு அப்பாலுள்ள நிறுவுகைக்குச் சென்று ஏதேனும் கருவியை, குழாய் இணைப்பை அல்லது நிலத்திலுள்ள இடத்தைப் பார்வையிட்டு அத்தகைய கரைக்கு அப்பாலுள்ள நிறுவுகையின், கருவியின், குழாய் இணைப்பின் அல்லது நிலத்திலுள்ள இடத்தின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாயுள்ள ஆள் இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றாரா என்பதனைத் தீர்மானிப்பதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பரிசோதனையை மேற்கொள்ளலாம் ; அல்லது

(உ) (i) ஏதேனும் கப்பல் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளது அல்லது அதனை மீறியுள்ளது என நியாயமான ஏதுக்களின்மீது அவர் சந்தேகிப்பாராயின் ; அல்லது

(ii) மோசமான காலநிலையின், பார்வைக்குத் தெளிவின்மையின் அல்லது கடலின் நிலைமையின், கப்பலின் அல்லது அதன் எவையேனும் உபகரணங்களின் நிலைமை அல்லது அதன் இணை நிறைவுப் பொருளின் ஏதேனும் குறைபாடு அல்லது அதன் கப்பற் சரக்கின் தன்மை அல்லது இயல்பு காரணமாக அத்தகைய கட்டளை நியாயப்படுத்தப்படுகின்றது எனவும் ஏதேனும் எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பு இலங்கை ஆள்புல நீர்ப் பரப்பில் அல்லது வேறு கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் வெளியேற்றப்படுவதைத் தடைசெய்யும் எனவும் அவர் திருப்தியுறுவாராயின்,

இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலிருந்து அல்லது ஏதேனும் வேறு கடலோர வலயத்திலிருந்து அதன் கரைமுனங்கில் அல்லது கரையோர வலயத்திலிருந்து அவர் பயணிக்கக்கூடியவாறான அத்தகைய மார்க்கமாகவும்

அத்தகைய முறையிலும் ஏதேனும் கப்பலை வெளியேற்றுமாறும் அத்தகைய நீர்ப்பரப்புகளுக்கு வெளியே தங்கியிருக்குமாறும் அல்லது நிலைப்படுத்துமாறும் நங்கூரமிடுமாறும் அல்லது அத்தகைய இடப்பரப்பினுள் அவரால் இனங்காணப்பட்ட இடமொன்றில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குத் தங்கியிருக்குமாறும் அக்கப்பலின் சொந்தக்காரருக்கு, தொழிற்படுத்துநருக்கு, கப்பற் தலைவனுக்கு அல்லது முகவருக்குக் கட்டளையிடலாம்.

(6) இப்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் ஆளெவரும் ஏதேனும் கடல்சார்பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதினின்று கப்பலை நியாயமற்ற வகையில் தடுத்துவைத்தல் அல்லது தாமதப்படுத்துதல் ஆகாது.

(7) கப்பலிற் பொருத்தப்படவேண்டுமென இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட உபகரணத்திலும் பொறித்தொகுதியிலும் ஏதேனும் சோதனையை மேற்கொள்வதற்கு அறவிடப்படக்கூடிய கட்டணங்களை அமைச்சர் விதித்துரைக்கலாம்.

(8) அதிகாரசபைக்கு -

(அ) ஒரு கணிசமான அளவு எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கிலுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் வெளியேற்றப்பட்டுள்ளது அல்லது கசிந்துள்ளது அல்லது கொட்டப்பட்டுள்ளது என ; அல்லது

(ஆ) எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கிலுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் கணிசமான அளவில் வெளியேற்றப்படும், கசியும் அல்லது கொட்டப்படும் பாரிய ஆபத்து உடனிகழும் என

நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருந்தால் அல்லது அறிவிக்கப்பட்டால் அதிகாரசபையானது -

(i) அதன் நிலைமையை அதிகாரசபைக்கு உடனடியாக அறிவிக்குமாறு இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில்

அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கிலுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றினுளுள்ள ஏதேனும் கப்பலின் சொந்தக்காரனுக்கு, தொழிற்படுத்துநருக்கு, கப்பற் தலைவனுக்கு அல்லது முகவருக்குக் கட்டளையிடலாம் ;

(ii) எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை கட்டுப்படுத்துவதற்கு அல்லது அடக்குவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு அல்லது அத்தகைய தீங்குவிளைவிக்கும் வேறு தீழ்ப்புப் பதார்த்தத்தின் சுத்திகரிப்பில் பங்குபற்றுமாறு ஏதேனும் கப்பலின் சொந்தக்காரருக்கு, தொழிற்படுத்துநருக்கு, கப்பற் தலைவனுக்கு அல்லது முகவருக்குக் கட்டளையிடலாம் அல்லது ஏதேனும் கருவியின், குழாய் இணைப்பின், கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் அல்லது நிலத்திலுள்ள இடத்தின் சொந்தக்காரருக்கு அதனைத் தொழிற்படுத்துநருக்கு அல்லது அதற்குப் பொறுப்பான ஆளுக்கு அறிவுறுத்தலாம்.

விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிடுவதற்கான தத்துவம்.

**10.** (1) ஏதேனும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சுத்திகரிப்பதற்கும் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு கப்பலின் சொந்தக்காரருக்கு கப்பல் தலைவனுக்கு அல்லது முகவருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு அல்லது கருவியின் சொந்தக்காரருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு அல்லது அதற்குப் பொறுப்பான ஆளுக்கு அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அல்லது குழாய் இணைப்பின் சொந்தக்காரருக்கு அல்லது தொழிற்படுத்துநருக்கு அல்லது நிலத்திலுள்ள ஏதேனும் மேற்சொல்லப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்பான ஏதேனும் கடலின் அல்லது இடத்தின் அல்லது இருப்பாட்சியாளருக்கு சொந்தக்காரருக்குக் கட்டளையிடுவது அதிகாரசபைக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறும் ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஏதேனும் கப்பலைத் தடுத்து வைப்பதற்கான தத்துவம்.

**11.** இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகள், எவ்வாறிருப்பினும், ஏதேனும் கப்பலிலிருந்து ஏதேனும் எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் வெளியேற்றப் பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏது இருப்பின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய கப்பலைத் தடுத்துவைக்கலாம் என்பதுடன், அதிகாரசபையின் அபிப்பிராயப்படி கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், கப்பற் தலைவன் அல்லது முகவர் இச்சட்டத்தின்கீழ் சொந்தக் காரரின், தொழிற்படுத்துநரின், கப்பற் தலைவனின் அல்லது முகவரின் பொறுப்பை ஈடுசெய்வதற்குப் போதுமானதாகும் அத்தகைய பணத்தொகையை அதிகாரசபையுடன் வைப்பீடு செய்யும்வரை அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவும்வரை கப்பல் அவ்வாறு தடுத்துவைக்கவும்பட லாம்.

கைது செய்யும் தத்துவம்.

**12.** (1) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பிரத்தியேகப் பொருளாதார வலயத்தின் இடப்பரப்பிற்குட்படாத வேறு இடப்பரப்பில், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புரியும் எவரேனும் ஆளைப் பிடியாணை இன்றிக் கைதுசெய்யலாம் என்பதுடன் விடயத்திற்கேற்ப நியாயாதிக்கம்கொண்ட மேல் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதியொருவரின் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் அவரை முன்வைக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தவறைப் புரிகையில் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருள் பறிமுதல் செய்யப்படலாம் என்பதுடன் விடயத்துக்கேற்ப, நியாயாதிக்கம் கொண்ட மேல்நீதிமன்றத்தால் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல்நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஓரிடத்தில் தடுத்து வைக்கவும் படலாம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சமாதான அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல்.

**13.** (1) ஒவ்வொரு பொலிசு அலுவலரும் அல்லது அதன் பொருட்டு எழுத்தில் குறித்தொதுக்கப்பட்ட பின்வரும் அலுவலர்களுள் எவரும் 12 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவராதல் வேண்டும் :—

(அ) ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் ;

(ஆ) கப்பற்றொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் வணிகக் கப்பற்றொழிற் பிரிவின் கப்பல் கணிப்பீட்டாளர்கள் ;

(இ) தீழ்ப்பைத் தடைசெய்தல், கட்டுப்படுத்துதல் அத்துடன் குறைத்தல் என்பவற்றில் விசேடித்த அறிவுகொண்டவரான இலங்கை துறைமுக அதிகாரசபையின் அலுவலர் ஒருவர்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும், அதன் நோக்கங்களுக்காகவும் சமாதான அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### கடல்சார் சூழல் பேரவையைத் தாபித்தல்

கடல்சார் சூழல் பேரவையொன்றைத் தாபித்தலும் அதன் பணிகளும்.

**14.** (1) கடல்சார் சூழல் பேரவை என அழைக்கப்படவேண்டிய பேரவையொன்று அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) :—

(அ) திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஆ) கைத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(இ) உல்லாசப் பயணத்துறை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஈ) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(உ) துறைமுகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஊ) கப்பற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(எ) பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஏ) கரையோரம் பேணல் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஐ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையின் தவிசாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ஒ) 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், அல்லது அவரது பிரதிநிதி ;

(ஓ) கடற் தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் – தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ஔ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் – தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(க) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் – தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி ;

(ங) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சூழல் பாதுகாப்பு அல்லது கடல்சார் தீழ்ப்பு என்னும் துறையில் தனித்துவம்பெற்ற உயர்கல்வி நிறுவனமொன்றின் கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் இருவர் ;

(ச) இலங்கைக் கப்பல்கள் முகவர்கள் கழகத்தின் தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய கழகத்தின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(ஞ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபாடுடைய பதிவுசெய்யப்பட்ட அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளிலிருந்து இரண்டு உறுப்பினர்கள்.

(2) அமைச்சர் பேரவையின் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரை பேரவையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

(3) பேரவையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையில் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தல் நிறைவேற்றுதல் மற்றும் புரிதல் தொடர்பிலான விடயங்கள் பற்றி அதிகாரசபைக்கு மதியுரை வழங்குதல் ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் பற்றி அதிகாரசபைக்கு மதியுரை வழங்குதல்.

**15.** (1) ஆளொருவர் — *பேரவையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட முடியாததற்கான தகவின்மைகள்.*

(அ) அவர் பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராக, ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின் ;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின், அல்லது

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருப்பின் ; அல்லது

(உ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்,

பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(2) அமைச்சரால் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள்நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) பதினான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினர் -

(அ) அவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள எவையேனும் தகவீனங்களுகளுக்கு அமைந்தவராயின் ; அல்லது

(ஆ) அவர் அமைச்சரின் அபிப்பிராயப்படி ஏதேனும் உடல் ஊனம் அல்லது சித்தசுவாதீனமின்மை காரணமாக அவரது கடமைகளை நிரந்தரமாக நிறைவேற்ற இயலாதவராக வரின் ; அல்லது

(இ) அவர் அமைச்சரின் அபிப்பிராயப்படி அதிகாரசபைக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் சாத்தியமுள்ள ஏதேனும் செயலைச் செய்யின்,

அமைச்சர் அவரைப் பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

(4) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பேரவையின் தவிசாளர் அல்லது 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் வேறு எவரேனும் அலுவலர் பதவியை வறிதாக்கும்பட்சத்தில் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினர் முற்போந்த உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து

அகற்றப்படும்பட்சத்தில் அமைச்சர் வேறோர் ஆளை அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகிப்பதற்கென நியமிக்கலாம்.

(5) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பேரவையின் தவிசாளர் அல்லது 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவரது பதவிக்குரிய கடமைகளை மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருப்பின் அமைச்சர் விடயத்திற்கேற்ப தவிசாளராக அல்லது உறுப்பினராக அவரது இடத்திற் கடமையாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பேரவையின் தவிசாளர் அல்லது 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் வேறு எவரேனும் உறுப்பினர் அதன்பொருட்டு அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியைத் துறக்கலாம்.

(7) பதினான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பேரவையின் தவிசாளருக்கு அல்லது 14 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் நிதியமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களின்படியும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து வேதியம் வழங்கப்படலாம்.

(8) பேரவையின் தவிசாளர் சமுகமாயிருப்பின் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும் ; அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயில்லாதவிடத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென உறுப்பினர்களுள் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(9) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் பதினொரு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(10) பேரவை அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

## பாகம் IV

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணியாட் டொகுதி.

**16.** (1) அதிகாரசபையால் நியமிக்கப்படும் பொதுமுகாமையாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் கப்பற்றொழில், துறைமுகத் தொழிற்பாடுகள், அல்லது கடல்சார் தீழ்ப்பைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் போன்ற துறையில் போதியளவு அனுபவமும் தகைமையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொதுமுகாமையாளர், அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் என்பதுடன், கொள்கை விடயங்கள்மீது தவிசாளரின் பொதுப் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய அதிகாரசபையின் அலுவல், அதிகாரசபையை ஒழுங்கமைத்தல், அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல், பணிகளை நிறைவேற்றுதல், அதிகாரசபையின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நிர்வாகக் கட்டுப்பாடு என்பவற்றிற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையால் நியமிக்கப்படும் அதிகாரசபைக்கான செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் சட்டம் அல்லது கம்பெனிச் செயலாண்மை நடைமுறை என்னும் துறையில் அனுபவமும் தகைமைகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) செயலாளர், சபையின் எல்லாக் கூட்டங்களிலும் சமுகமாயிருத்தல் வேண்டும்; அத்துடன் அதிகாரசபையின் எல்லாக் கூட்டங்களினதும் தகுந்த கூட்டக் குறிப்பறிக்கையின் பதிவேடுகளைப் பேணுவதற்கும் பொறுப்பாயிருத்தலும் வேண்டும்.

தொழில் நிபந்தனைகள்.

**17.** (1) அதிகாரசபை, அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் திறமையுடன் பிரயோகிப்பதற்கும் பணிகளைப் புரிவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியம் என அது கருதும் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் வீதங்களிலும் வேதனம் வழங்கப்படுதல்

வேண்டும் என்பதுடன் அவர்கள், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையின் அலுவலர் எவரும் அலுவலரினதும், பொது நிர்வாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) எந்த ஆள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கென அதிகாரசபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளாரோ அந்த எவரேனும் ஆளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து அந்த ஆளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்பட்ட சேவைக்காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் தொடர்பில் அவ்வாறு செய்வதற்கான அவசியம் எழும்போதெல்லாம், எண்பிக்கப்பட்ட அனுபவம் உடையவரும் கப்பற்றொழில், துறைமுகத் தொழிற்பாடு அத்துடன் கடற்தீழ்ப்பைத் தடைசெய்தல் மற்றும் முகாமை செய்தல் என்பன சார்ந்த துறைகளில் அல்லது அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சார்புடைய அத்தகைய வேறு துறையில் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளவருமான ஆளொருவரின் அல்லது அத்தகைய ஆட்களின் குழுவொன்றின் சேவைகளை ஓர் ஆலோசகரின் தன்மையில் அதிகாரசபையால் தீர்மானிக்கப்படவேண்டிய கட்டணமொன்றுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாகம் V

### நிதி

அதிகாரசபையின் நிதியம்.

**18.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அதில் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டிற்கென பாராளுமன்றத்தால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபையால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) கடன்கள், கொடைகள், நன்கொடைகள், இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது மானியங்கள் என்ற வகையில் இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி, எத்தன்மையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து அதிகாரசபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) நியமிக்கப்படும் தேதிக்கு நேரடியாக முந்திய நாளன்று 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத்

தடைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையின் வரவில் இருக்கும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(உ) கட்டணங்கள், குற்றப்பணங்கள், அறவீடுகள், விதிப்பனவுகள் அல்லது தண்டப்பணங்கள் என்ற வகையில் அதிகாரசபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(2) அதிகாரசபையால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கையில், புரிகையில் அத்துடன் நிறைவேற்றுகையில் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**19.** (1) அதிகாரசபை அதன் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினம் மற்றும் அதிகாரசபையின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கணக்குகள்.

(2) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

**20.** அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

## பாகம் VI

### ஏற்பு வசதிகளும் தீழ்ப்பிற்கெதிரான தடுப்பு வழிமுறைகளும்

**21.** அதிகாரசபை கழிவு முகாமைத்துவத்தைக் கையாளுகையில் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— கழிவு முகாமைத்துவம்.

(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்ற அல்லது இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்

லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் பயணம் செல்கின்ற ஏதேனும் கப்பல் மிஞ்சியுள்ள ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்புகளை வெளியேற்றுவதனை அல்லது பாடிய விடுவதனை இயலச் செய்வதற்கு கடல்சார் சூழல் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய துறைமுகத்திற்குள்ளே அல்லது வெளியே ஏற்பு வசதிகளை வழங்குதல் ;

(ஆ) வெளியேற்றுவதற்கு மிஞ்சியுள்ள எண்ணெய் எதனையும் கொண்டுள்ள கப்பல்களால் பயன்படுத்தப் படும் எல்லா துறைமுகங்களையும், கப்பற்துறைமுகங்க ளையும், முடிவிடங்களையும், கப்பல் பழுதுபார்த்தற் சாலைகளையும், துறைமுக மேடைகளையும் அல்லது வேறு ஏதேனும் கடல்சார்ந்த அமைப்புகளையும் அத்த கைய வெளியேற்றலின் நோக்கத்திற்காக போதியளவு ஏற்பு வசதிகளை வழங்குமாறு அத்தகையவற்றுக்குப் பொறுப்பானவர்களைப் பணித்தல் :

இப்பிரிவின் நோக்கங்களுக்கு அதிகாரசபை வேறு எவரேனும் ஆளின் உதவியை நாடலாம் அல்லது வேறு எவரேனும் ஆளினால் அத்தகைய வசதிகள் வழங்கப் படுதவதற்கு ஒழுங்கு செய்யலாம் ;

(இ) வெளியேற்றுவதற்கு எஞ்சியுள்ள எண்ணெய் எதனையும் கொண்டுள்ள கப்பல்களால் பயன்படுத்தப்படும் எல்லா துறைமுகங்களையும், கப்பற் துறைமுகங்களையும் முடிவிடங்களையும் கப்பல் பழுதுபார்த்தற் சாலைகளை யும் துறைமுக மேடைகளையும் அல்லது வேறு கடல் சார்ந்த அமைப்புகளையும் அதிகாரசபையால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய அமைப்பின் சேவைக ளைப் பெறுமாறு அத்தகையவற்றுக்குப் பொறுப்பான வர்களைப் பணித்தல் ;

(ஈ) எல்லா துறைமுகங்களையும், கப்பற் துறைமுகங்களை யும், முடிவிடங்களையும், கப்பல் பழுதுபார்த்தற்சாலை களையும் துறைமுக மேடைகளையும் அல்லது வேறு ஏதேனும் கடல்சார்ந்த அமைப்புகளையும் —

(i) அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய கழிவுக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறும், அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் அத்தகைய திட்டத்தைக் கிரமமாக நாளது வரை சீராக்குமாறும் ; அத்துடன்

(ii) அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட வகுப்பாக்கச் சங்கமொன்றால் அங்கீகரிக்கப்பட்ட சூழல் தாக்க மதிப்பீடு (சூ.தா.ம.) ஒன்றை விதித்துரைக்கப்பட்ட இடை வெளிகளில் மேற்கொள்ளுமாறும் அத்தகையவற்றுக்குப் பொறுப்பானவர்களைப் பணித்தல்.

எண்ணெய்கள் மற்றும் தீழ்ப்புகள் தொடர்பான பதிவேடுகள்.

**22.** (1) இலங்கை நீர்ப்பரப்பினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களினுள், அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் பிரவேசிக்கும் கப்பல் ஒவ்வொன்றும் எண்ணெய்கள், தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் தொடர்பிலான பதிவேடுகளைக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கப்பலின் தலைவன் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள் பின்வருவன தொடர்பிலான நடவடிக்கைகளை எண்ணெய் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும் :—

(அ) எண்ணெய்ச் சரக்குகளை ஏற்றுதல் ;

(ஆ) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் வேறு ஏதேனும் கடலோர வலயத்தில், அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் கப்பலொன்றுக்கும் கப்பலிலிருந்தும் எண்ணெய் கப்பற் சரக்கின் இடமாற்றம் ;

(இ) கடல்சார் பயணமொன்றின்போது எண்ணெய்ச் சரக்கின் உள்ளக இடமாற்றம் ;

(ஈ) எண்ணெய் கப்பற் சரக்கின் வெளியேற்றம் ;

(உ) எண்ணெய் எரிபொருள் தாங்கிகளை அடிச்சுமையிடல் அல்லது சுத்திகரித்தல் (கப்பற் சரக்காயினுஞ்சரி அல்லது பங்கர் எரிபொருள் தாங்கியாயினுஞ்சரி) ;

(ஊ) அத்தகைய தாங்கிகளிலிருந்து அடிச்சுமையிடலை வெளியேற்றுதலும் அவற்றைச் சுத்திகரித்தலும் ;

(எ) எண்ணெய் அடங்கிய ஏதேனும் கலவையில் தண்ணீரிலிருந்து அல்லது வேறு பதார்த்தங்களிலிருந்து எண்ணெய்யை வேறுபடுத்துதல் ;

(ஏ) வேறு ஏதேனும் எண்ணெய்த் தன்மையுள்ள மீதங்களைக் கையுதிர்த்தல் ;

(ஐ) முற்போந்த உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பிலான தொழிற்பாடுகளினின்றெழும் ஏதேனும் எண்ணெய்யை அல்லது தண்ணீரை அல்லது வேறு பதார்த்தத்தைக் கையுதிர்த்தல் ;

(ஒ) ஏதேனும் பொறித்தொகுதியின் இடைவெளிகளுக்குள் திரண்டுள்ள கப்பலில் அழுக்கு நீரைக் கையுதிர்த்தல் ;

(ஓ) ஏதேனும் கப்பலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏதேனும் கப்பலுக்கான அல்லது கப்பற் சரக்கிற்கான சேதத்தைத் தடுக்கும் அல்லது மனித உயிர்களைக் காப்பாற்றும் நோக்கத்திற்காக எண்ணெய் அல்லது எண்ணெய் அடங்கிய கலவை கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்ட ஏதேனும் சந்தர்ப்பம் ;

(ஔ) எண்ணெய் அல்லது எண்ணெய் அடங்கிய கலவையொன்று, கப்பலுக்கான சேதத்தின் விளைவாக அல்லது ஒழுக்கின் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் கப்பலிலிருந்து எண்ணெய் கசிவதாக அல்லது கசிந்துள்ளதாகக் காணப்பட்ட ஏதேனும் சந்தர்ப்பம் ;

(க) எண்ணெய் வெளியேற்றும் தொழிற்பாடுகளையடுத்து ஏற்புடைத்தான அல்லது அவற்றையொத்த எல்லா மூடிகளும் மூடப்பட்டமை ; அத்துடன்

(ங) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாத் தொழிற்பாடுகளும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகள் கப்பலின் தலைவனால் அல்லது அதற்குப் பொறுப்பான ஆளினாலும் அத்துடன் அத்தகைய கப்பல் உந்துகோளாக இருக்குமிடத்து :—

(அ) அவை உந்துகோளுக்கு எண்ணெயின் இடமாற்றத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு எண்ணெயை வழங்கும் ஆளினாலும் ;

(ஆ) அவை உந்துகோளிலிருந்து எண்ணெயின் இடமாற்றத்தைத் தொடர்புறுத்தும் அளவுக்கு எந்த ஆளுக்கு எண்ணெய் ஒப்படைக்கப்பட்டதோ அந்த ஆளினாலும்,

வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(4) எண்ணெய் சடுதியாக வெளியேறும் பட்சத்தில், வெளியேற்றத்தின் சூழ்நிலைகளையும் அதற்கான காரணங்களையும் பற்றிய கூற்றொன்று எண்ணெய்ப் பதிவேட்டில் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்ட தொழிற்பாடு ஒவ்வொன்றும், அத்தொழிற்பாட்டுக்குத் தோதான ஏட்டில் எல்லாப் பதிவுகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் தாமதமின்றி இயைபான எண்ணெய்ப் பதிவேட்டில் முழுமையாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட தொழிற்பாடு ஒவ்வொன்றும், கப்பலின் தலைவனால் அல்லது கப்பலுக்குப் பொறுப்பான ஆளினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் அத்துடன் எண்ணெய்ப் பதிவேட்டிலுள்ள எல்லாப் பதிவுகளின் எந்த நாட்டின் கொடியைப் பறக்க விடுவதற்கு கப்பல் உரித்துடையதாயிருக்கின்றதோ அந்த நாட்டின் அரசகரும மொழியில் இருத்தல் வேண்டும் என்பதுடன், சர்வதேச எண்ணெய்த் தீழ்ப்புத் தடைச் சான்றிதழொன்றை வைத்திருக்கும் கப்பல்களுக்கு ஒன்றில் ஆங்கில மொழியில் அன்றேல் பிரேஞ்சு மொழியில் இருத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கப்பற் தலைவன் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள், விதித்துரைக்கப்படக்கூடிய தீழ்ப்பாக்கிகளின் வெளியேற்றம் அல்லது கசிவு தொடர்பான பதிவுகளை அலுவலக முறையான குறிப்பேடொன்றாக அல்லது புறம்பான குறிப்பேடொன்றாக எடுத்துச் செல்லப்படும் பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் பேணப்படவேண்டிய பதிவேட்டினதும் வேறு பதிவுகளினதும் படிவம் பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(8) ஏதேனும் கப்பல், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவேடொன்றை எடுத்துச் செல்லத் தவறுமாயின் கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், முகவர் மற்றும் கப்பற் தலைவன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதிவேட்டில் அல்லது இப்பிரிவின்கீழ் வைத்திருக்கப்படும் ஏதேனும் பதிவில், அவரது அறிவுக்கெட்டியவரை ஏதேனும் முக்கியமான விவரத்தில் பொய்யான அல்லது பிறழ்வழி இட்டுச் செல்லும் பதிவொன்றைச் செய்யும் ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(10) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பதிவேடு அதிகாரசபையால் அல்லது அதிகாரசபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் நியாயமான எல்லா நேரங்களிலும் பரிசீலனைக்குத் தயாராகக் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய இடமொன்றில் வைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் மனிதர் எவருமில்லாமல் இழுத்துச் செல்லப்படும் கப்பலொன்றின் விடயத்தில், அத்தகைய பதிவேடு கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், கடைசியாகப் பிரவேசித்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பேணிக்காக்கப்படுதலும் வேண்டும்.

(11) (அ) அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் –

(i) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் உள்ள

கப்பலில் ஏறி எண்ணெய்ப் பதிவேட்டை அல்லது தீங்கு விளைவிக்கும் பதார்த்தம் அல்லது தீழ்ப்பாக்கிகள் தொடர்பான பதிவேடுகளைப் பார்வையிடலாம் ; அல்லது

(ii) எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் தொடர்பில் பதிவேட்டில் செய்யப்பட்ட பதிவுகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை, அது தொடர்பில் எழுத்திலான அறிவித்தலொன்று அத்தகைய கப்பற் தலைவனுக்கு அல்லது அத்தகைய கப்பலுக்குப் பொறுப்பான ஆளுக்குத் தெரிவிக்கப்பட்ட இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் அதிகாரசபைக்கு அனுப்பிவைக்குமாறு அத்தகைய கப்பற் தலைவனை அல்லது கப்பலுக்குப் பொறுப்பான ஆளைத் தேவைப்படுத்தலாம் ; அல்லது

(iii) ஏதேனும் பதிவின் பிரதியொன்றை எடுத்து அப்பிரதியை அத்தகைய பதிவின் ஓர் உண்மைப்பிரதி என அத்தாட்சிப் படுத்துமாறு கப்பற் தலைவனை அல்லது கப்பலுக்குப் பொறுப்பான ஆளைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன்

(ஆ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறும் கப்பற் தலைவன் அல்லது கப்பலுக்குப் பொறுப்பான ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(12) இப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படும் ஏதேனும் பார்வையிடலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளின் வழங்கீடும் கப்பலுக்கு ஏற்படுத்தப்படக்கூடிய ஆகக்குறைந்த தாமதத்துடனேயே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(13) எட்டாம் மற்றும் (9) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்

மேல் மூன்று மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஆறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(14) இச்சட்டத்தின்கீழ் தொடரப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் —

(அ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி ஏதேனும் கப்பலில் எடுத்துச் செல்லப்படும் ஏதேனும் பதிவேடு அல்லது வைத்திருக்கப்படும் அல்லது பேணப்படும் பதிவுகள் சாட்சியத்தில் ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய பதிவேட்டிலுள்ள பதிவொன்றின் ஏதேனும் பிரதி அல்லது ஏடு எந்தக் கப்பலில் எடுத்துச்செல்லப் படுகின்றதோ அந்தக் கப்பலின் தலைவனால் அல்லது அதற்குப் பொறுப்பாயுள்ள ஆளினால் அல்லது பதிவேடு எந்த ஆளினால் வைத்திருக்கப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆளினால் பதிவேட்டின் உண்மைப்பிரதியொன்றாக சான்றுப் படுத்தப்பட்ட பதிவேடு சான்றாக ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்ற எண்பிப்பாதலும் வேண்டும் ;

(இ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி பேணப்படும் பதிவேடொன்றாகக் கருதப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது வைத்திருக்கப்படும் பதிவு அல்லது இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றாகக் கருதப்பட்ட ஏதேனும் ஆவணம் முரணாக எண்பிக்கப்பட்டாலன்றி விடயத்திற்கேற்ப அத்தகைய ஏடு, பதிவு அல்லது பிரதி ஒன்றாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

தீழ்ப்பைத் தடைசெய்வதற்கான கப்பலிலுள்ள உபகரணங்கள்.

**23.** (1) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது ஏதேனும் வேறு கடலோர வலயங்களினுள் அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் பிரவேசிக்கும் கப்பல் ஒவ்வொன்றும் எண்ணெய், தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் தீழ்ப்பு, வெளியேற்றப்படுவதைத் தடைசெய்வதற்கான அத்தகைய உபகரணங்களைப் பொருத்தப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய தடை தொடர்பிலான அல்லது அதன் இடைநேர் விளைவான அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற கப்பலொன்றின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், கப்பற் தலைவன் அல்லது முகவர் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல் ரூபா மூன்று மில்லியனுக்குக் குறையாததும் ரூபா ஆறு மில்லியனை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VII

### கடலோர இடைநேர்வுகள்

கடலோர இடைநேர்வுகள்.

**24.** (1) ஏதேனும் கடலோர அசம்பாவிதங்களின் காரணமாக அல்லது அதினின்றெழும் ஏதேனும் செயலின் விளைவாந்தன்மையாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அல்லது ஏதேனும் கடலோர வலயத்திற்கு அல்லது அதன் கரைக்கு அல்லது இலங்கையின் கரையோர வலயத்துக்கு அல்லது அத்தகைய நீர்ப்பரப்புகளில் அல்லது கரையோரத்தில் ஏதேனும் அக்கறை தொடர்பில் தீழ்ப்பு ஏற்படுத்தப்படுமிடத்து அல்லது உடனிகழக்கூடிய அச்சுறுத்துதல் ஒன்று இருக்குமிடத்து அதிகாரசபையானது, அத்தகைய தீழ்ப்பை அல்லது அத்தகைய தீழ்ப்பின் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு, தணிப்பதற்கு அல்லது நீக்குவதற்கு அவசியமாகக்கூடியவாறு, கப்பல் அல்லது அதன் கப்பற்சரக்கு அல்லது கப்பலிலுள்ள ஏதேனும் எண்ணெய் தொடர்பில் அவசரமானதும் உடனடியானதுமான அத்தகைய வழிமுறைகளை எடுக்குமாறு —

(அ) கப்பலின் சொந்தக்காரரை கப்பலை, வாடகைக்கு அமர்த்தியவரை அல்லது கப்பலை உடைமையில் கொண்டுள்ள வேறு எவரேனும் ஆளை ;

(ஆ) கப்பற் தலைவனை ;

(இ) கப்பலை உடைமையில் கொண்டுள்ளவரும் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாயுள்ளவருமான எவரேனும் கப்பல் மீட்குநரை அல்லது கப்பலை உடைமையில் கொண்டுள்ள மீட்குநரின் சேவையாளராக அல்லது முகவராகவுள்ள எவரேனும் ஆளை ; அல்லது

(ஈ) அதிகாரசபையால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளைப்

பணிக்கலாம்.

(2) எவரேனும் ஆளுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் :—

(அ) கப்பல் குறித்துரைக்கப்பட்ட ஓரிடத்திற்கு அப்புறப்படுத்தப்படவேண்டும் என அல்லது குறித்துரைக்கப்பட்ட ஓர் இடப்பரப்பிற்கு அல்லது பிரதேசத்திற்கு அப்புறப்படுத்தப்படவேண்டுமென ;

(ஆ) கப்பலை குறித்துரைக்கப்பட்ட ஓரிடத்திற்கு அல்லது இடப்பரப்பிற்கு அல்லது பிரதேசத்திற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு மார்க்கத்தின் வழியாக அப்புறப்படுத்தவேண்டாமென ;

(இ) ஏதேனும் எண்ணெய் அல்லது கப்பற்சரக்கு, விடயத்திற்கேற்ப ஒன்றில் ஏற்றப்படவேண்டுமென அல்லது ஏற்றப்படவேண்டாமென அல்லது கீழிறக்கப்படவேண்டுமென அல்லது கீழிறக்கப்படக் கூடாதென அல்லது வெளியேற்றப்படவேண்டுமென அல்லது வெளியேற்றப்படக்கூடாதென ; அல்லது

(ஈ) குறித்துரைக்கப்பட்ட மீட்பு வழிமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென அல்லது மேற்கொள்ளப்படக்கூடாதென,

தேவைப்படுத்தலாம்.

(3) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பு, தீழ்ப்பை அல்லது தீழ்ப்பின் ஆபத்தைத் தடுப்பதற்கு அல்லது தணிப்பதற்கு அல்லது தவிர்ப்பதற்குப் பயனுறுதியற்றது அல்லது போதுமானதல்லாதாயின் அதிகாரசபை -

(அ) கப்பலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அமிழ்த்துவதற்கான அல்லது அழித்துவிடுவதற்கான நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கலாம் ;

(ஆ) கப்பலின் கட்டுப்பாட்டின் கையேற்பை அவசியமாக ஈடுபடுத்தக்கூடிய நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கலாம் ; அல்லது

(இ) ஏதேனும் எண்ணெய்யை ஏற்றுவதனை, கீழிறக்குவதனை அல்லது வெளியேற்றுவதனை ஈடுபடுத்தக்கூடிய நடவடிக்கைகளைப் பொறுப்பேற்கலாம்.

(4) இப்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அதிகாரசபைக்கெதிராக அல்லது அதிகாரசபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கெதிராக நட்டஈடுகளுக்கு ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தின் வழக்கெதுவும் இருத்தலாகாது.

24 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட வழிமுறைகள் உள்ளவாறான அல்லது அச்சுறுத்தப்பட்ட நட்டஈட்டின் விகிதாசாரப் படியாதல்.

**25.** (1) இருபத்துநாலாம் பிரிவின்கீழ் அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பைப் பின்பற்றி ஏதேனும் செயலை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் -

(அ) தீழ்ப்பை அல்லது அச்சுறுத்தப்பட்ட தீழ்ப்பைத் தடுப்பதற்காக அல்லது குறைப்பதற்காக செய்யப்பட்ட ஏதேனும் செயல் அத்தகைய தீழ்ப்பினால் ஏற்படுத்தப்பட்ட உள்ளவாறான அல்லது அச்சுறுத்தப்பட்ட சேதத்தின் விகிதாசாரப்படியாதல் வேண்டும் என்பதனையும் ;

(ஆ) கொடி அரசினதும் மூன்றாம் அரசினதும் வேறு எவரேனும் ஆளினதும் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் உரிய மதிப்பளிக்கப்படுவதையும்

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (அ) இருபத்துநாலாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை மீறுகின்ற அல்லது அதனுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) இருபத்துநாலாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளைப் பின்பற்றி செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை வேண்டுமென்றே தடை செய்கின்ற

ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பதினைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் முப்பத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VIII

### தீழ்ப்புத்தடை – குற்றவியல் பொறுப்பு

எண்ணெய், தீங்கு விளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளுக்குள் அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தில் வெளியேற்றப் படுதல் அல்லது கசிதல்.

**26.** ஏதேனும் எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி ஏதேனும் கப்பலிலிருந்து அல்லது எண்ணெய்யை, தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்களை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை ஒரு கப்பலுக்கு அல்லது ஒரு கப்பலிலிருந்து மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவியிலிருந்து (நிலத்தில் ஓர் இடத்திற்காயினுஞ்சரி அல்லது ஓர் இடத்திலிருந்தாயினுஞ்சரி அல்லது வேறொரு கப்பலிலிருந்தாயினுஞ்சரி) அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகை ஒன்றிலிருந்து அல்லது ஒரு குழாய் இணைப்பிலிருந்து அல்லது நிலத்திலுள்ள ஏதேனும் இடத்திலிருந்து அல்லது கடல்சார்படுகையின் அல்லது கீழ் மண்ணின் நுண்ணாய்வுக்கான அல்லது அதன் இயற்கை வளங்களைத் தேடிப்பெறலுக்கான ஏதேனும் தொழிற்பாட்டின் விளைவாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள்ளும் அத்துடன் வேறு கடலோர வலயங்களுக்குள்ளும் அதன் கரை முனைங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் வெளியேற்றப்படின் அல்லது கசியின், அப்போது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய,—

(அ) வெளியேற்றம் அல்லது கசிவு கப்பலொன்றிலிருந்தாயிருக்குமிடத்து கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், கப்பற் தலைவன் அல்லது முகவர் ; அல்லது

(ஆ) வெளியேற்றம் அல்லது கசிவு, எண்ணெயை தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது ஒரு தீழ்ப்பாக்கியை கப்பலொன்றுக்கு அல்லது ஒரு கப்பலிலிருந்து மாற்றும்பொழுது இடம்பெறுமிடத்து, கப்பலின் சொந்தக்காரர் அல்லது கப்பற் தலைவன், அல்லது வெளியேற்றம் அல்லது கசிவு எண்ணெயை, தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது ஓர் தீழ்ப்பாக்கியை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கருவியிலிருந்தானதாயிருக்குமிடத்து கருவியின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள் ; அல்லது

(இ) வெளியேற்றம் அல்லது கசிவு கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றிலிருந்ததாயிருக்குமிடத்து அல்லது கடற்படுக்கையின் அல்லது கீழ்மண்ணின் தேடிப்பெறலுக்கான அல்லது அதன் இயற்கைவளங்களின் தேடிப்பெறலுக்கான ஏதேனும் தொழிற்பாட்டின் விளைவொன்றானதாயிருக்குமிடத்து அந்த நிறுவுகையின் சொந்தக்காரர் அல்லது அதன் இருப்பாட்சியாளர் அல்லது தொழிற்பாட்டைக் கொண்டுநடாத்தும் ஆள் அல்லது தொழிற்பாட்டிற்குப் பொறுப்பான ஆள் ; அல்லது

(ஈ) வெளியேற்றம் அல்லது கசிவு குழாய் இணைப்பொன்றிலிருந்ததாயிருக்குமிடத்து குழாய் இணைப்பின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் ; அல்லது

(உ) வெளியேற்றம் அல்லது கசிவு நிலத்திலுள்ள ஓர் இடத்திலிருந்ததாயிருக்குமிடத்து, அவ்விடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது வெளியேற்றம் அல்லது கசிவு சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் அனுமதியின்றி அவ்விடத்திலுள்ள வேறோர் ஆளின் செயலினால் ஏற்படுத்தப்பட்டதாயிருக்குமிடத்து அவ்வாள்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நாலு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

அனுமதிப்பத்திர மொன்றின் அதிகாரத்தின் கீழ் மாத்திரம் எண்ணெய் முதலியவற்றைக் கொட்டுதல்.

**27.** அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றின் நியதிநிபந்தனைகளுக்கிணங்கவன்றி, இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள், அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் ஏதேனும் எண்ணெயை, தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது தீழ்ப்பாக்கியைக் கொட்டுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் நான்கு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

அனுமதிப் பத்திரமொன்றுக் கான விண்ணப்பம்.

**28.** (1) கப்பலொன்றின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின் தொழிற்படுத்துநர், குழாய் இணைப்பொன்றின் சொந்தக்காரர் அல்லது அத்தகைய சொந்தக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதிகாரசபைக்கு அதன்பொருட்டு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது இலங்கை ஆள்புல நீர்ப்பரப்பினுள் அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் எண்ணெயை, தீங்குவிளைவிக்கும் ஏதேனும் பதார்த்தத்தை அல்லது வேறு தீழ்ப்பாக்கியைக் கொட்டுவதற்கு அத்தகைய சொந்தக்காரருக்கு, தொழிற்படுத்துநருக்கு அல்லது ஆளுக்கு அதிகாரமளிக்கும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) அதிகாரசபையால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தின் கொடுப்பனவின்மீது தவிர (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு அதிகாரசபையால் அல்லது அதன்பொருட்டு அதிகாரசபையால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்று —

(i) எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருத்தலும் வேண்டும்;

(ii) எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றதோ அந்த நியதிநிபந்தனைகளைத் தருதல் வேண்டும் ; அத்துடன்

(iii) கைமாற்றப்படற்பாலதாதல் ஆகாது.

அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்குள்ள தத்துவம்.

**29.** (1) அதிகாரசபை 28 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றிற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது, கடலினுள் கொட்டப்படவுள்ள எண்ணெயின், தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தின் அல்லது தீழ்ப்பாக்கியின் வகையையும் கையுதிர்க்கப்படும் அமைவிடத்தையும் கருத்திற்கொண்டு, தேவைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம் அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்குதலானது அத்தகைய ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் வாழும் உயிரினங்களுக்குக் கெடுதலாகலாம் என அல்லது நீரின் தரத்தின்மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் என அல்லது ஏதேனும் கடல்சார் செயற்பாடுகளுக்குத் தடங்கல் ஏற்படுத்தும் என அது திருப்தியுறுமிடத்து, அனுமதிப்பத்திரமொன்றை வழங்க அல்லது அத்தகைய அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்க மறுக்கலாம் என்பதுடன் அத்தகைய முடிவை உடனடியாக விண்ணப்பகாரருக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் முடிவினால் இன்னலுறுகின்ற 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆளெவரும் விண்ணப்பதாரருக்கு அம்முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கெதிராக கடல்சார் தீழ்ப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) செயலாளர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது —

(அ) மேன்முறையீட்டை அனுமதிக்கலாம் என்பதுடன் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை விடயத்திற்கேற்ப வழங்குமாறு, புதுப்பிக்குமாறு அல்லது திருத்துமாறு அல்லது இடைநிறுத்தும் அல்லது இல்லாதொழிக்கும் கட்டளையை வறிதாக்குமாறு, எந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைப் பணிக்கலாம் ; அல்லது

(ஆ) மேன்முறையீட்டை நிராகரிக்கலாம்.

(4) அதிகாரசபை (3) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தைப் பிணித்துள்ள நிபந்தனைகள்.

**30.** இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் வாழும் உயிரினங்களின் பாதுகாப்பையும் நீரின் தரத்தையும் கடல்சார் செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டு அதிகாரசபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா நிபந்தனைகள் சேர்க்க பிணிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய நிபந்தனைகள் ஏனையவற்றுடன் —

(அ) கடலினுள் கொட்டப்படவுள்ள எண்ணெயின் பதார்த்தத்தின் அல்லது தீழ்ப்பின் சோதிக்கப்பட்ட மாதிரிபற்றி அதன்பொருட்டு அதிகாரசபையின் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரால் தயாரிக்கப்பட்ட எழுத்திலான அறிக்கை கப்பலின் துலாம்பரமான ஓரிடத்தில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும் எனவும் ; அத்துடன்

(ஆ) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் கலம் அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தினத்தன்றும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் எனவும்,

தேவைப்படுத்தும் நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்.

அனுமதிப் பத்திரத்தில் அதிகாரமளிக்கப்பட்ட கலங்களின் விவரக் கூற்றுக்கள்.

**31.** அதிகாரசபை 29 ஆம் பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும் நேரத்தில் எண்ணெயை அல்லது ஏதேனும் தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் கொட்டுவதற்கு அனுமதிப்பத்திரத்தால் அதிகாரமளிக்கப்பட்ட கலம் எந்தக் கொடியின்கீழ் மிதந்து செல்கின்றதோ அந்தக் கொடியைக் குறிப்பீடுசெய்வதன்மூலம் அதன்கண் அக்கலத்தைக் குறித்துரைக்கலாம்.

அனுமதிப் பத்திரம் கைமாற்றப் படற்பாலதல்ல.

**32.** இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் அப்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எதுவும் வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படற்பால தாதலாகாது என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய கைமாற்றம் வெற்றும் வெறிதுமானதாதலும் வேண்டும்.

பொறுப்பிலிருந்து விலக்களிப்பு.

**33.** ஆளெவரும் —

(அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அல்லது அமைச்சரின் எழுத்திலான அறிவுறுத்துதல்களின்மீது செய்யப்படும் ஏதேனும் செயலின்போது, அமிழ்ந்து போன, தரைதட்டிய அல்லது கைவிடப்பட்ட கலங்கள் அதிகாரசபையால் அப்புறப்படுத்தப்படுவதன் விளை வாக எண்ணெய், அல்லது தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி கொட்டப்படு மாயின் ; அல் லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தீழ்ப்புச் சம்பவமொன்றை அதனின்றெழும் சேதத்தைக் குறைப்பதன்மூலம் முறிய டிக்கும்நோக்கத்திற்காக எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்கள் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் அதிகார சபையால் வெளியேற்றப்படுமாயின்

24 ஆம் அல்லது 26 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தவறுக்கு ஆளாத லாகாது.

## பாகம் IX

### தீழ்ப்பைத் தடைசெய்தல் – குடியியல் பொறுப்புடைமை

குடியியல் பொறுப்புடைமை.

**34.** (1) பிரிவு 24 அல்லது 26 என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலின் விளைவாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள் அல்லது வேறு ஏதேனும்கடலோர வலயம் அல்லது அதன் கரைமுனங்கு அல்லது இலங்கையின் கரையோர வலயம் தீழ்ப்பாக்கப்படுமிடத்து, விடயத்திற்கேற்ப கப்பலின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் அல்லது கருவியின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள் அல்லது கரைக்கப்

பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது குழாய் இணைப்பின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் அல்லது அப்போதைக்கு நிலத்திலுள்ள இடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது பெற்றோலியம் உட்பட இயற்கைவளங்களை தேடிப் பெறும் தொழிற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் ஆள் அல்லது அத்தகைய தொழிற்பாட்டிற்குப் பொறுப்பாயுள்ள ஆள் –

(அ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது அத்தகைய சட்டத்தின்கீழ் வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் ஏதேனும் எண்ணெயை, தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் வெளியேற்றத்தால், கசிவினால் அல்லது கொட்டப்படுவதனால் அத்தகைய ஆள்புல நீர்ப்பரப்புகளுக்கு அல்லது வேறு கடலோர வலயத்துக்கு அல்லது கரைமுனங்கிற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதேனும் நலன்களுக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் சேதத்திற்கு ;

(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அல்லது கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினால் ஏதேனும் எண்ணெயின், தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தின் அல்லது தீழ்ப்பாக்கிகளின் வெளியேற்றத்தால், கசிவால் அல்லது கொட்டப்படுவதால் அல்லது அது தொடர்பான எவையேனும் நலன்களுக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் சேதத்தை தடுப்பதற்கும், குறைக்கும் அல்லது அகற்றும் நோக்கத்திற்கு எடுக்கப்படும் எவையேனும் வழிமுறைகளின் செலவுகளுக்கு.

பொறுப்பாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்கு இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயம் அல்லது கரைமுனங்கு அல்லது இலங்கையின் கரையோர வலயம் தொடர்பிலான அக்கறைகளுள் –

(அ) கடல்சார்றொழில் நடவடிக்கைகள் உட்பட கடல்சார், கரையோரம், துறைமுக அல்லது பொங்குமுக செயற்பாடுகளையும் ;

(ஆ) உல்லாசப் பயணத்துறையை ஊக்குவித்தல், இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடல்சார் துறை வலயத்தில் அல்லது கடல்சார் கரைகளும் முருகைக்கற்களும் உட்பட உல்லாசப் பயணத் துறைக் கவரிடங்களின் பேணலையும் அபிவிருத்தியையும் ;

(இ) கரையோரக் குடிசனத்தின் சுகாதாரமும் அவர்களின் நல்வாழ்வும் ; அத்துடன்

(ஈ) உயிருள்ள கடல்சார் வளங்களினதும் வன சீவராசிகளினதும் பாதுகாப்பும் பேணலும்

அடங்கும்.

(3) ஏதேனும் எண்ணெய், தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படுமிடத்தும் அல்லது கசியுமிடத்தும் அல்லது கொட்டப்படுமிடத்தும் அத்துடன் இப்பிரிவின் பொறுப்பு ஒவ்வொரு கப்பலினதும் சொந்தக்காரரால் அல்லது தொழிற்படுத்துநரால் உறப்படுமிடத்தும், அத்துடன் எந்தச் சேதத்திற்கு அல்லது செலவுகளுக்கு ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது தொழிற்படுத்துநரும் ஆளாகின்றாரோ அந்தச் சேதத்தை அல்லது செலவுகளை மற்றவர் அல்லது மற்றவர்கள் ஆளாயிருக்கும் சேதத்திலிருந்து அல்லது செலவுகளிலிருந்து நியாயமாகப் பிரிக்க இயலாதிருக்குமிடத்து சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் இப்பிரிவின்கீழ் எந்த முழுச் சேதத்திற்கு அல்லது செலவுகளுக்கு ஆளாகின்றாரோ அந்த முழுச் சேதத்திற்கும் அல்லது செலவுகளுக்கும் ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது தொழிற்படுத்துநரும் ஒருமித்தும் தனித்தும் ஆளாதல் வேண்டும்.

**35.** (1) (அ) முப்பத்து நாலாவது பிரிவின் கீழான ஏதேனும் ஒரு சம்பவம் தொடர்பிலான பொறுப்புடைமை, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினுட் சேர்க்கப்படக்கூடியவாறான 1992 ஆம் ஆண்டின் தீழ்ப்புச் சேதத்துக்கான குடியியற் பொறுப்பு மீதான சர்வதேசச் சமவாயத்தின் அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க வரையறுக்கப்படுதல் வேண்டும். பொறுப் புடைமையின் வரையறை.

(ஆ) விடயத்துக்கேற்ப கப்பலொன்றின் சொந்தக்காரரால் அல்லது தொழிற்படுத்துநரால் அல்லது கருவியொன்றின் சொந்தக்காரரால் அல்லது அதற்குப் பொறுப்பான ஆளினால் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின், குழாய் இணைப் பொன்றின் அல்லது நிலத்தின் மீதான இடமொன்றின் சொந்தக் காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் பெற்றோலிய வளங்கள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வுத் தொழிற்பாட்டைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆளினால் அல்லது சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அத்தகைய தொழிற்பாட்டிற்குப் பொறுப்பான ஆளினால் உறப்பட்ட அதிகபட்ச பொறுப்பானது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினுட் சேர்க்கப்படக் கூடியவாறான 1992 ஆம் ஆண்டின் தீழ்ப்புச் சேதத்துக்கான குடியியற் பொறுப்பு மீதான சர்வதேசச் சமவாயத்தின் அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்து நான்காம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயல் கப்பலொன்றின் சொந்தக்காரரின் அல்லது தொழிற்படுத் துநரின் அல்லது கருவியொன்றின் சொந்தக்காரரின் அல்லது அதற்குப் பொறுப்பான ஆளின் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின், குழாய் இணைப்பொன்றின் அல்லது நிலத்தின் மீதான இடத்தின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட் சியாளரின் அல்லது பெற்றோலிய வளங்கள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வுத் தொழிற்பாட்டைக் கொண்டு நடாத் தும் அல்லது அத்தகைய தொழிற்பாட்டிற்குப் பொறுப்பான ஆளின் கவனயீனத்தின் காரணமாக ஏற்படுமிடத்து, அத்தகைய ஆள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட வரையறை களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு உரித்து டையவராதலாகாது.

கட்டாயக் காப்புறுதி.

**36.** (1) இலங்கையிலுள்ள துறைமுகமொன்றினுட் பிரவேசிக் கின்றதும் அல்லது அங்கிருந்து புறப்பட்டுச் செல்கின்றதும் அல்லது இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கினால் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் அல்லது அத்தகைய நீர்ப்பரப்புகளிலுள்ள முடிவிடமொன்றினுட் பிரவேசிக்கின்றதும் அல்லது அங்கிருந்து புறப்பட்டுச்செல்கின்ற தும் கப்பற்சரக்காக இரண்டாயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான எண்ணெயை மொத்தமாக ஏற்றிச் செல்கின்றதுமான கப்பலொன்றின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர்,

அத்தகைய கப்பல் தொடர்பில் அதிகாரசபையால் ஏற்றுக் கொள்ளப்படற்பாலதான செல்லுபடியாகும் காப்புறுதிச் சான்றிதழொன்றை அல்லது வங்கியொன்றின் உத்தரவாதம் ஒன்றை அல்லது சர்வதேச நிதியமொன்றினால் ஒப்படைக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைப்போன்ற நிதிசார்ந்த பிணைப்பொறுப்பொன்றையும் உடைமையில் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், கப்பல் 1992 ஆம் ஆண்டின் எண்ணெய் தீழ்ப்புச் சேதத்திற்கான குடியியற் பொறுப்புமீதான சர்வதேசச் சமவாயத்திற்கு ஒரு திறத்தவரான நாடொன்றில் பதிவுசெய்யப்பட்டிருப்பின் அந்நாட்டின் தோதான அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் தமது உடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(2) கப்பலொன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவால் தேவைப்படுத்தப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ் அல்லது வேறு பிணைப் பொறுப்பு கப்பலில் எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும் என்பதுடன், கோரிக்கையின்மீது கப்பற் தலைவனால் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையால் அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(3) கப்பலொன்று (1) ஆம் உட்பிரிவிற்கு முரணாக இலங்கைத் துறைமுகம் ஒன்றில் பிரவேசிக்குமிடத்து அல்லது அங்கிருந்து வெளியேறுமிடத்து அல்லது பிரவேசிக்க அல்லது வெளியேற எத்தனிக்குமிடத்து அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பையும் வேறு கடலோர வலயத்தையும் அதன் கரைமுனங்கை அல்லது இலங்கையின் கரையோர வலயத்தை வந்தடையுமிடத்து அல்லது அங்கிருந்து வெளியேறுமிடத்து அல்லது வந்தடைய அல்லது வெளியேற எத்தனிக்குமிடத்து அத்தகைய கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர் அல்லது கப்பற் தலைவன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) கப்பலொன்று (2) ஆம் உட்பந்தியில் தேவைப்படுத்தப்பட்டவாறு சான்றிதழொன்றை அல்லது பிணைப்பொறுப்பொன்றை எடுத்துச் செல்லத்தவறுமிடத்து அல்லது கப்பலொன்றின் கப்பற் தலைவன் அதனை முன்வைக்கத் தவறுமிடத்து கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர் அல்லது கப்பற் தலைவன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்

வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஆறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) கப்பலொன்று இப்பிரிவிற்கு முரணாக இலங்கையிலுள்ள துறைமுகமொன்றிலிருந்து வெளியேற எத்தனிக்குமிடத்து கப்பல் அதிகாரசபையால் தடுத்து நிறுத்தப்படலாம்.

எண்ணெய் இடமாற்றத்தின் மீதான மட்டுப்பாடுகள்.

**37.** (1) ஏதேனும் கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், கப்பற் தலைவன் அல்லது முகவர் அத்துடன் அல்லது ஏதேனும் இடத்தின் இருப்பாட்சியாளர் எவரும் துறைமுகத் தலைவனுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு (இது பொதுவானதாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்டதாகவோ இருக்கலாம்) அதற்குத் தீயணைப்புத் திணைக்களத்தின் முற்சம்மதம் பெறப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் நாளின் பி. ப. 6 மணிக்கும் மு. ப. 6 மணிக்குமிடையில் இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தில் கலமொன்றுக்கு அல்லது கலமொன்றிலிருந்து எண்ணெயை இடமாற்றுதலாகாது.

(2) இப்பிரிவிற்கு முரணாக கலமொன்றுக்கு அல்லது கலமொன்றிலிருந்து ஏதேனும் எண்ணெய் மாற்றப்படின் எந்தக் கலத்திற்கு அல்லது கலத்திலிருந்து அல்லது நிலத்திலுள்ள ஏதேனும் இடத்திற்கு அல்லது இடத்திலிருந்து அது இடமாற்றப்படுகின்றதோ அந்தக் கலத்தின் கப்பற் தலைவன் அல்லது இடத்தின் இருப்பாட்சியாளர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நான்கு மில்லியனுக்குக் குறையாததும் ஐந்து மில்லியனை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் —

(அ) எண்ணெயின் மாற்றம் இடம்பெறவேண்டிய இடத்தையும் ; அத்துடன்

(ஆ) மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டிய நேரத்தையும் எந்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அந்தக் காலப்பகுதியையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி எது விடயத்திலும் அங்கீகாரத் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது.

அப்புல நீர்ப்பரப்புகளினுள் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் வெளியேற்றப்படுவதை அறிவிக்கும் கடமை.

**38.** எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்காக ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி –

(அ) ஒரு கப்பலிலிருந்து ;

(ஆ) எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியொன்றிலிருந்து ;

(இ) கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றிலிருந்து ;

(ஈ) குழாயிலிருந்து ;

(உ) நிலத்திலுள்ள இடமொன்றிலிருந்து ;

(ஊ) நிலையான அல்லது நடமாடும் மேடையொன்றிலிருந்து,

இலங்கையின் நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு கடலோர வலயத்தினுள் அதன் கரைமுனங்கினுள் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தினுள் வெளியேற்றப்படுமாயின், கசியுமாயின் அல்லது கொட்டப்படுமாயின் அப்போது, விடயத்திற்கேற்ப, கப்பலின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் அல்லது கருவியின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பான ஆள் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின், குழாய் இணைப்பின் அல்லது நிலத்திலுள்ள இடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது பெற்றோலியம் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வுத் தொழிற்பாட்டொன்றைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆள் அல்லது அத்தகைய தொழிற்பாட்டிற்குப் பொறுப்பான ஆள் அத்தகைய நிகழ்வு பற்றிய எல்லா விவரங்களையும் அதிகாரசபைக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

எதிர்பாராது நிகழக்கூடிய எண்ணெய் சிந்து தலுக்கான திட்டம்.

**39.** (1) எண்ணெயை கப்பலொன்றுக்கு அல்லது கப்பலொன்றி லிருந்து மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் கப்பற் துறைமுகங் கள், துறைமுக முடிவிடங்கள், கப்பல் பழுதுபார்க்கும் களங்கள், துறைமுக காய்ந்த மேடைகள், கரைக்கப்பாலுள்ள நிறுவுகைகள், குழாய் இணைப்புகள் அல்லது வேறு கருவிகள் என்பவற்றிற்குப் பொறுப்பாயுள்ள எல்லா ஆட்களையும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் திட்டமொன்றைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கும் அதிகாரத்தை அதிகாரசபை கொண் டிருத்தல் வேண்டும். திட்டம் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய கருமங்களை உள்ளடக்குதலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கத் திட்டமொன்றைச் சேர்ப்பிக்கத் தவறும் ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன் றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத தும் பதினைந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் X

## பெற்றோலியம் அல்லது சார்புடைய செயற்பாடு உட்பட்ட இயற்கை வளங்களின் தேடிப்பெறலில் ஈடுபட்டிருக்கும்போது தீழ்ப்பைத் தடைசெய்தல்

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் தேடிப்பெறலில் ஈடுபட்டிருப் பவர்களால் அனுசரிக்கப்பட வேண்டிய நியமங்கள்.

**40.** (1) ஆளெவரும் –

(i) தீழ்ப்பின் கட்டுப்பாட்டையும் தடையையும் உறுதிப்படுத் தும் நோக்கத்திற்கு விதித்துரைக்கப்பட்ட தேசிய நியதிக ளுக்கு அவர் இசைந்து ஒழுகி விதித்துரைக்கப்பட்ட தீழ்ப்பு எதிர்ப்புக் கருவியை நிறுவி, பேணி வந்தாலன் றியும் ;

(ii) கடலிற் கொட்டுதல் தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்க, அவர் எல்லாக் கைத்தொழிற் குப்பைகளையும் மொத்தமாகக் கையுதிர்த்தாலன்றியும்;

(iii) எண்ணெய்க் களஞ்சிய நிறுவுகைக்குப் பயன்படுத்தப் படும் நிறுவுகைகளும் எண்ணெய்க் குழாய் இணைப்புக ளும் அதிகாரசபையின் தேவைப்படுத்தப்பட்ட நியமங்க ளுக்கு இசைவாயிருந்தாலன்றியும் ;

(iv) அவர் இரசாயனப் பொருள் சிதறற் கருவியொன்றைப் பயன்படுத்துவதற்கு அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றலான்றியும் ;

(v) தைனமைற்று அல்லது அதனையொத்த கேடான வெடி பொருட்களைப் பயன்படுத்தும் நோக்கங்களுக்கு விதித்துரைக்கப்பட்ட முறையில் அவர் உரிமமொன்றைப் பெற்றலான்றியும்,

பெற்றோலிய வளங்களின் தேடிப்பெறலில் அல்லது ஏதேனும் சார்புடைய செயற்பாட்டை மேற்கொள்ளுதலோ, அதில் ஈடுபடுதலோ ஆகாது.

(2) பெற்றோலியம் உட்பட இயற்கை வளங்களைத் தேடிப் பெறுதலை மேற்கொள்கின்ற அல்லது பெற்றோலியம் உட்பட இயற்கை வளங்களைத் தேடிப் பெறுதலில் அல்லது ஏதேனும் தொடர்புடைய செயற்பாட்டில் ஈடுபடுகின்ற ஒவ்வோராளும் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

தவறுகளும் தண்டனைகளும்.

**41.** (1) நாற்பதாம் பிரிவின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் ஆறு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணம் ஒன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக சாத்தியமாகுமிடத்து சேதத்தை அகற்றுமாறும் அல்லது திருத்துமாறும் தீழ்ப்பாக்கப்பட்ட இடப்பரப்பை தூப்பரவாக்குவதில் அதிகாரசபையால் உறப்பட்ட செலவுகள் எவையுமிருப்பின் அவற்றைச் செலவீடு செய்யுமாறும் அத்துடன் சூழலுக்கான சேதம் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட ஏதேனும் நட்டத்திற்கு அரசுக்கு நட்டஈடு செய்யுமாறும் நீதி மன்றத்தினால் கட்டளையிடப்படுதலும் வேண்டும்.

(2) (i) ஏதேனும் கடல்சார் சூழல் தீழ்ப்பை ஏற்படுத்துகின்ற;

(ii) பாரிய எண்ணெய்த் தீழ்ப்பு விபத்தொன்றுபற்றி அதிகாரசபைக்கு அறிவிக்கத் தவறுகின்ற ;

(iii) இரசாயனப்பொருள் சிதறற் கருவியொன்றைப் பயன்படுத்துகையில் விதித்துரைக்கப்பட்ட நியமங்களை அனுசரிக்கத் தவறுகின்ற ;

(iv) விதித்துரைக்கப்பட்ட முறையில் தீழ்ப்பு எதிர்ப்புப் பதிவுப் புத்தகத்தைப் பேணத் தவறுகின்ற ;

(v) தீழ்ப்பு எதிர்ப்புப் பதிவுப் புத்தகத்தில் பொய்யான பதிவுகளைச் செய்கின்ற ;

(vi) அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பை நிறைவேற்றத் தவறுகின்ற.

ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன்மேல் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் XI

### நானாவித ஏற்பாடுகள்

தடுத்து வைக்கப்பட்ட கப்பல்கள் கடல் நோக்கிச் செல்லல்.

**42.** (1) ஏதேனும் கப்பல் 11 ஆம் பிரிவின்கீழ் அல்லது 36 ஆம் பிரிவின் (5) உட்பிரிவின்கீழ் தடுத்து வைக்கப்படின், அத்துடன் கப்பல் தகுந்த அதிகாரியால் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் அது கடல்நோக்கிச் செல்லுமாயின், கப்பலை கடலுக்கு அனுப்பும் செயலுக்கு ஒரு திறத்தவராக இருக்கின்ற அல்லது அதனுடன் தொடர்புடைய கப்பற் தலைவன், சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், முகவர் அல்லது வேறு எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பதினைந்து மில்லியனை விஞ்சாதுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) கப்பலொன்றைத் தடுத்து வைப்பதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் அது அவசியமானதென அவர் கருதினால் இலங்கையின் ஆயுதந்தாங்கிய படைகளின் உதவியை நாடலாம்.

*வெளிநாட்டுக் கப்பல்களைத் தடுத்து வைத்தல் பற்றி காவற்தூது அலுவலகத்திற்கு அறிவித்தல்.*

**43.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வெளிநாட்டுக் கப்பல் தடுத்துவைக்கப்படும் பொழுதெல்லாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கப்பலின் தலைவனுக்கு அல்லது சொந்தக்காரருக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் ஏவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படும்பொழுதெல்லாம்,

எந்தநாட்டின் கொடியின்கீழ் கப்பல் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் காவற்தூது அதிகாரிக்கு அதிகாரசபையால் உடனடியாக அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்படவேண்டிய அறிவித்தல் எந்த ஏதுக்கள் மீது கப்பல் தடுத்துவைக்கப்பட்டுள்ளதோ அல்லது வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவோ அந்த ஏதுக்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

*அறிவித்தல்கள் எழுத்திலிருத்தல்.*

**44.** இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் எவரேனும் ஆளுக்கு (இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் அல்லாதவர்) அதிகாரசபையால் வழங்கப்பட அல்லது ஆக்கப்படவென இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல், அதிகாரம், கட்டளை, பணிப்பு அல்லது வேறு தொடர்பாடல் எழுத்தில் வழங்கப்படுதல் அல்லது ஆக்கப்படுதல் வேண்டும்.

*ஆவணங்களைச் சேர்ப்பித்தல்.*

**45.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு எவரேனும் ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டியிருக்குமிடத்து, ஏதேனும் ஆவணம் —

(அ) அத்தகைய ஆவணம் எந்த ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆளுக்கு பிரதியொன்றை நேரடியாக ஒப்படைப்பதன் மூலம் அல்லது அத்தகைய பிரதியை கடைசியாக அறியப்பட்ட அவரது வாழிடத்தில் விட்டுவைப்பதன்மூலம் அல்லது அத்தகைய பிரதியை தபாலில் அல்லது தொலைநகலில் அனுப்புவதன்மூலம் ;

(ஆ) ஆவணம் –

(i) கப்பற் தலைவனுக்கு (தலைவன் ஒருவர் இருக்கும் விடயங்களில்) ; அல்லது

(ii) அத்தகைய கப்பலின் பணிக்குழு உறுப்பினர் ஒருவராகவிருக்கும் ஆளொருவருக்கு,

சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து கப்பலின் ஏவலிலுள்ள அல்லது பொறுப்பாயுள்ள அல்லது ஏவலிலுள்ளவராக அல்லது பொறுப்பாயுள்ளவராகத் தோன்றும் ஆளுடன் ஆவணத்தை கப்பலில் விட்டுவைப்பதன் மூலம சேர்ப்பிக் கப்படலாம்.

(இ) ஆவணம் கப்பற் தலைவனுக்கு சேர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பின், தலைவரொருவர் இல்லாவிடில் அத்துடன் கப்பல் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பு களினுள் அல்லது வேறு கடலோர வலயங்களினுள் இருக்குமாயின் கப்பலின் முகாமை செய்யும் சொந்தக் காரருக்கு அல்லது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பு களினுள்ளும் கடலோர வலயங்கள் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட கடலோர வலயங்களினுள்ளும் முகாமைசெய்யும் சொந்தக்காரர் எவரும் இல்லாவிடில் சொந்தக்காரரின் இலங்கையில் வதியும் எவரேனும் முகவருக்கு அல்லது அத்தகைய முகவர் எவரும் அறியப்படாவிடில் அல்லது கண்டுபிடிக்கப்படமுடியா விடில் அதன் பிரதியை கப்பலில் துலாம்பரமான ஓரிடத்தில் ஒட்டிவிடுவதன்மூலம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) கடல்சார் தகுநிலையின்மை காரணமாக கப்பலொன்றைத் தடுத்துவைத்தல் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் ஆவணம் கப்பற் தலைவனுக்குச் சேர்ப்பிக்கப்படுவதைத் தடைசெய்யும் ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஏழு மில்லியன் ரூபாவுக்குக் குறையாதும் எட்டு மில்லியன் ரூபாவை விஞ்சாதுமான குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு

இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தடைக்கு திறத்தவராக அல்லது தொடர்புடையவரும் கப்பலொன்றின் சொந்தக்காரர் அல்லது தலைவன் எவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் எட்டு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குமேற்படாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**46.** கப்பலொன்றின் சொந்தக்காரர், தொழிற்படுத்துநர், தலைவன் அல்லது முகவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணம் அல்லது உறப்பட்ட ஏதேனும் பொறுப்பு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்படாதிருக்குமிடத்தும் அல்லது செலுத்தப்படாதிருக்குமிடத்தும் நீதிமன்றம் கொடுப்பனவை வலுவுக்கிடும் அதன் தத்துவங்களுக்கு மேலதிகமாக, செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகை கப்பலையும் அதன் கப்பற் பாய் இழுப்புக் கருவி, தளபாடம் மற்றும் ஒப்பனை என்பவற்றையும் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அறவிடப்பட வேண்டுமெனப் பணிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கப்பலொன்றின் விற்பனை.

**47.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் முறையே (358 ஆம் அத்தியாயமான) கடல்சார்படைச் சட்டத்தினதும் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தினதும் (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தினதும் ஏற்புடைத்தாகும் இலங்கை கடல்சார்படைக்கும் இலங்கை தரைப்படைக்கும் இலங்கை வான்படைக்கும் சொந்தமான ஏதேனும் கப்பலுக்கு ஏற்புடையனவாதலாகாது. சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைத்தாகாமை.

நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்.

*48.* (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறு ஒவ்வொன்றும் அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணமொன்றின் மேல் நீதிமன்றமொன்றினால் இலங்கையின் ஏதேனும் நீதி வலயத்தில் அமரும் மேல்நீதிமன்றம் ஒன்றினால் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல்நீதிமன்றம் ஒன்றினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் பாகம் VIII இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் தொடரப்பட்ட நடர்ச்சி ஒவ்வொன்றும், அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மாகாணமொன்றின் மேல்நீதிமன்றத்தால், இலங்கையின் ஏதேனும் நீதி வலயத்தில் அமரும் மேல்நீதிமன்றத்தால் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல் நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நீதிமன்றம் ஒவ்வொன்றும் இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அதிகபட்ச தண்டத்தை விதிப்பதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் தத்துவத்தின் பிரயோகம் உட்பட ஏதேனும் கருமம் அல்லது வினா தொடர்பில் இச்சட்டத்தால் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிராதவிடத்து அல்லது போதிய ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து நீதிமன்றமானது இச்சட்டத்தால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஏற்பாட்டுடன் முரண்படாத அல்லது ஒவ்வாததாய் இராத அளவுக்கு அத்தகைய கட்டளைகளை ஆக்குவதற்கான அல்லது அத்தகைய பணிப்புகளை வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சான்றிதழ் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றச் சான்றாதல்.*

**49.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கான ஏதேனும் குற்ற வழக்கில், சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட தீழ்ப்பு உண்மையிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்ற பயன்பாட்டிற்கு தவிசாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று சாட்சியத்தில் ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் அடங்கியுள்ள விடயங்களின் முதற்தோற்றச் சான்றாதல் வேண்டும்.

*எவர் குற்ற வழக்குத் தொடரலாம் என்பது.*

**50.** இச்சட்டத்தின் தவறொன்று தொடர்பிலான குற்றவழக்கு ஒவ்வொன்றும் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அதன்பொருட்டு விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரால் நடாத்தப்படுதல் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்.*

**51.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டும் என இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களுக்கும் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்களுக்கும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர் குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது பின்வரும் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :

(அ) அதிகாரசபையால் அனுமதிப்பத்திரங்களும் உரிமங்களும் வழங்கப்படுதல் தொடர்பிலான நடபடிமுறைகளைக் குறித்துரைத்தல் ;

(ஆ) தீழ்ப்பைத் தடுப்பதற்கு கப்பல்களில் பொருத்தப்படவேண்டிய உபகரணத்தின் வகையைக் குறித்துரைத்தல்;

(இ) எண்ணெயைத் தவிர நீருடன் சேர்க்கப்படும்பொழுது அத்தகைய நீரைத் துப்புரவற்றதாக, நச்சுத்தன்மை கொண்டதாக, தூய்மையற்றதாக அல்லது எவரேனும் ஆளின் சுகாதாரத்திற்கு, பாதுகாப்பிற்கு அல்லது நலனுக்குப் பாதகமானதாக அல்லது கடல்சார் வாழ்க்கைக்குக் கெடுதலானதாக ஆக்கும் வகையில் களங்கப்படுத்தும் பயனுடைய வேறு ஏதேனும் பதார்த்தத்தை அல்லது பதார்த்தத்தின் வகுப்பைக் குறித்துரைத்தல் ;

(ச) எந்த நிபந்தனைகளுக்கமைய எண்ணெய் சிந்துதலுக்கான எதிர்பாராத நிகழும் திட்டம் தயாரிக்கப்படவுள்ளதோ அந்த நிபந்தனைகளைக் குறித்துரைத்தல் ;

(உ) ஏதேனும் எண்ணெயை அல்லது வியாபாரக் கழிவை நீக்கும் நோக்கத்திற்கும் மற்றும் ஏதேனும் வியாபாரக் கழிவு இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கின் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் வெளியேற்றப்படுவதைத் தடுக்கும் அல்லது குறைக்கும் நோக்கத்திற்கும் அதிகாரசபை தீர்மானிக்கக் கூடியவாறான ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை அல்லது கைத்தொழிலைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆளினால் நிறுவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட உபகரணத்தின் வகையைக் குறித்துரைத்தல் ;

(ஊ) ஏதேனும் கப்பலிலிருந்து தீழ்ப்பாக்கி வெளியேற்றப்படுவதன் காரணமாக எவையேனும் இடைநேர்வுகள் தொடர்பில் புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைமுறை தொடர்பாக ;

(எ) ஏற்பு வசதிகளை வழங்கும் ஆட்களைப் பதிவு செய்தல் உட்பட, அந்த ஏற்பு வசதிகள் எந்த நிபந்தனைகளின்மீது வழங்கப்படவேண்டுமோ அந்த நிபந்தனைகளையும் அத்தகைய வசதிகளை வழங்குவதற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களையும் விதித்துரைத்தல் ;

(ஏ) அமைச்சரவையால் வழங்கப்படுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க , இலங்கையில் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கின் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் பெற்றோலியம் உட்பட இயற்கை வளங்களை தேடிப்பெறல் தொடர்பில் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடைமுறைகளைக் குறித்துரைத்தல் ;

(ஐ) அமைச்சரவையால் வழங்கப்படுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க பெற்றோலிய தொழிற்பாட்டை, தேடிப்பெறலை அல்லது ஏதேனும்சார்புடைய தொழிற்பாட்டை மேற்கொள்கின்ற அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களாலும் தொழிற்பாட்டாளர்களாலும் பேணப்படவேண்டிய நியமங்களைக் குறித்துரைத்தல் ;

(ஒ) அமைச்சரவையால் வழங்கப்படுகின்றவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க கரைக்கப்பாலும் கரையின் அடிப்படையிலானதுமான பெற்றோலியத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் வேறு சார்புடைய தீழ்ப்புத் தடை உபகரணங்களினதும் நியமங்களையும், பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தரத்தையும், நடமாடும் மேடைகளினதும் வகையையும் குறித்துரைத்தல் ;

(ஓ) ஆரம்ப மற்றும் இறுதிச் சூழல் பரிசோதனை அறிக்கையையும் அத்தகைய அறிக்கையில் குறிப்பிடவேண்டிய விவரங்களையும் அத்தகைய அறிக்கைகளின் தொகுப்பில் ஈடுபடவுள்ள ஆட்களிடமிருந்து தேவைப்படுத்தப்பட்ட மூலப் பிரமாணத்தையும் வகுத்துத் தொகுக்கப்படவேண்டிய முறையையும் முறைமையையும் குறித்துரைத்தல் ;

(ஔ) தொழிற்பாட்டாளர் ஒருவரால் பேணப்படும் தீழ்ப்புத் தடைப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவேண்டிய விவரங்களைக் குறித்துரைத்தல் ;

(க) எண்ணெய்த் தன்மையுடைய நீரின் வெளியேற்றம் தொடர்பிலான தேசிய நியமங்களையும், கடலிற் கொட்டுதல் தொடர்பிலான நிபந்தனையையும், டைனமைற்று வெடிபொருட்களைப் பயன்படுத்தும்பொழுது கடைப்பிடிக்கப்படவேண்டிய நிபந்தனைகளையும் குறித்துரைத்தல் ;

(ங) கரைக்கப்பால் எண்ணெய்க் களஞ்சிய நிறுவுகை, எண்ணெய்க் குழாய் இணைப்புகள், கரைக்கப்பால் எண்ணெய்க் கிணறுகளைப் பரிசோதித்தல் என்பன

தொடர்பில் ஒப்பந்தக்காரர் ஒருவரால் கடைப்பிடிக்கப் படுமாறு தேவைப்படுத்தப்படும் நியதிநிபந்தனைகளையும் அத்துடன் எண்ணெயின் அல்லது கடலினுள் விடுவிக்கப்படும் எண்ணெய்க் கலவைகளின் கையுதிர்ப்பிற்கு எடுக்கப்படவேண்டிய வழிமுறைகளையும் குறித்துரைத்தல் ;

(ச) பாரிய எண்ணெய் ஒழுக்கொன்று ஏற்படுமிடத்து எடுக்கப்படவேண்டிய வழிமுறைகளைக் குறித்துரைத்தலும், தீர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தணிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இரசாயனப்பொருள், சிதறும் கருவி தொடர்பிலான விவரங்களையும் அத்தகைய சிதறும் கருவியைப் பயன்படுத்தும் முறையையும் குறித்துரைத்தலும் ;

(ஞ) சூழல் சேதத்திற்கு நட்டஈடு பெறுவதற்குப் பயன்படுத்தப்படவேண்டிய பாடிவத்தையும் அதன்கண் கொடுத்துதவப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விவரங்களையும் விதித்துரைத்தல் ;

(ட) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளின் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் எண்ணெயின் தேடிப்பெறல் தொடர்பில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைத்தல்;

(ண) எண்ணெயை ஏற்றிச்செல்வதிலும், எண்ணெய் நிரப்பும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதிலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் இதற்கான உரிமைகளை வழங்குவதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் சேவைகளை வழங்குவதற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களையும் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய உரிமங்கள் வழங்கப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகளையும் இனங்காணுதலும் ; அத்துடன்

(த) உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள் வழங்குவதற்கு அல்லது இச்சட்டத்தின்கீழ் வேறு ஏதேனும் சாதனத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது எவையேனும் அத்தியா

வசிய கண்காணிப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அறவிடப்படவேண்டிய கட்டணங்களை அல்லது அறவீடுகளைக் குறித்துரைத்தல் ;

(3) அமைச்சரவையால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டின் தேதியன்று ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது, வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக் கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

அதிகாரசபை தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

**52.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிக்கும் நோக்கத்திற்கு அதிகாரசபைக்கு பொதுவான அல்லது விசேட பணிப்புகளை எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் அதிகாரசபை அத்தகைய பணிப்புகளுக்குப் பயனளித்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதிகாரசபையின் ஆதனம் மற்றும் தொழில் தொடர்பில் விவரத்திரட்டுகளையும் கணக்குகளையும் அத்துடன் வேறு தகவலையும் அவர் வெளிப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்கு எழுத்தில் கொடுத்துதவுமாறு அதிகாரசபையை காலத்துக்குக்காலம் பணிக்கலாம் என்பதுடன் அதிகாரசபை அத்தகைய பணிப்புகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) அமைச்சர் அதிகாரசபையின் எல்லா அல்லது எவையேனும் பணிகள், அதன்பொருட்டு அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் புலனாய்வு செய்யப்பட்டு அதன்மீது

அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மீது, அதிகாரசபை அத்தகைய கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அளித்தலும் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

**53.** வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலே தவிர, இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாட்டை மீறும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படல்.

**54.** (1) வேறு வகையாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவிடத்து தவிர அதிகாரசபையால் அல்லது அதிகாரசபைக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்படும் ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அதிகாரசபையால் உறப்படும் ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் அதிகாரசபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவையாளரால் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினரால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் அல்லது பேரவையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்படும் ஏதேனும் குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் தீர்மானித்தால், அத்தகைய குற்றவழக்கில் அல்லது தொடர்ச்சியில் அத்தகைய செலவுகள் அவரால் அறவிடப்பட்டாலன்றி அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

ஒத்துழைப் பதற்கான கடமை.

**55.** (1) ஏதேனும் கப்பற் தலைவன் அல்லது ஏதேனும் கருவிக்கு, குழாய் இணைப்பிற்கு, கரைக்கப்பாலுள்ள நிறுவுகைக்கு அல்லது நிலத்திலுள்ள இடத்திற்குப் பொறுப்பாயுள்ள ஆளொருவர் அல்லது எவரேனும் ஒப்பந்தக்காரர், சேவை துணை ஒப்பந்தக்காரர், தொழிற்படுத்துநர், நிலையான மற்றும் நடமாடும் மேடைகள் மற்றும் தொடர்பட்ட நிறுவுகைகள் தொடர்பில் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின்கீழ் பெற்றோலியத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகள் உட்பட இயற்கை வளங்களின் தேடிப்பெறலை மேற்கொள்கின்ற அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஆளெவரும், இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அதிகாரசபையின் அல்லது அதிகாரசபையால் அதன்பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கடமைகளைப் புரிவதனை அத்தகைய அதிகாரசபைக்கு அல்லது ஆளுக்கு இயலச்செய்வதற்கு அவரது தத்துவத்தின்கீழ் நியாயமான எல்லா உதவிகளையும் அத்தகைய அதிகாரசபைக்கு அல்லது ஆளுக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்திற்கென அதிகாரசபையால் அல்லது அத்தகைய ஆளினால் நியாயமாகத் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை அதிகார சபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(2) அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் அதிகாரமளிக் கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதினின்று அல்லது புரிவதி னின்று ஆளெவரும் அதிகாரசபையை அல்லது அத்தகைய ஆளைத் தடுத்தலோ அல்லது தடைசெய்தலோ ஆகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் அதி காரமளிக்கப்பட்ட ஆள், அதன் அல்லது அவரது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதினின்று அல்லது புரிவ தினின்று அதிகாரசபையை அல்லது அத்தகைய ஆளைத் தடுக் கின்ற அல்லது தடைசெய்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

அதிகார சபையின் அலுவலர் பகிரங்க அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

**56.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

**57.** அதிகாரசபை இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஆட்களின் குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகளுக்கு பணிப்பாளர்களினதும் அக்குழுவின் குறித்தசில ஆட்களினதும் பொறுப்புடைமை.

**58.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்று, ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது —

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் ஒரு பணிப்பாளராக, பொதுமுகாமையாளராக, முகவராக, செயலாளராக அல்லது அக்குழுவின் இதனையொத்த பதவியை வகிக்கும் அலுவலர் ; அல்லது

(ஆ) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இல்லாவிடில் தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினரொருவராக இருந்த ஒவ்வோராளும்,

தவறு அவரது சம்மதமோ அல்லது உடந்தையோ இல்லாமலேயே புரியப்பட்டது எனவும், அவரது பணியின் இயல்பையும் தொடர்புபட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்க வேண்டியவாறு அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் எனவும் அவர் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தை இல்லாதொழித்தல்.

**59.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 59 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச்சட்டம் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

**60.** 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச்சட்டத்தை இல்லாதொழித்தல் எவ்வாறிருப்பினும் – சேமிப்புக்கள்.

(1) நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனமும் நியமித்த தேதியிலிருந்து அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(2) கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையும் நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று நிலவுகின்றவையுமான எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் நியமிக்கப்படும் தேதியிலிருந்து அதிகாரசபையால் அல்லது அதனுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(3) கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையால் வழங்கப்பட்டவையும் நியமித்த தேதிக்கு நேர்முன்னர் வலுவிலுள்ளவையுமான எல்லா அனுமதிப்பத்திரம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் (பு.உ.ஒ.) அல்லது கூட்டிணைப்பு புறவிதிகளும் (கூ.பு.) நியமித்த தேதியிலிருந்து முறையே அதிகாரசபையால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் புரிந்துணர்வு உடன்படிக்கை களாகவும் (ஒ.பு.உ.) கூட்டிணைப்புப் புறவிதிகளாகவும் (கூ.பு.) கருதப்படுதல் வேண்டும் ;

(4) கடல்சார் தீழ்ப்பு அதிகாரசபையால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்டனவும் நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாக் குற்றவழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் விடயத்திற்கேற்ப அதிகாரசபையால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட குற்றவழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கத் தொடரவும்படலாம் ; அத்துடன் நிறைவுசெய்யவும்படலாம் ;

(5) நியமித்த தேதிக்கு நேர்முன்னர் கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படும் தேதியிலிருந்து அதிகாரசபையின் உறுப்பினர்களாகவும் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(6) கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக ஆக்கப்பட்டவையும் நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று திருப்திப்படுத்தப்படாது எஞ்சியுள்ளவையுமான எல்லாத் தீர்ப்புகளும் கட்டளைகளும், நியமித்த தேதியிலிருந்து விடயத்திற்கேற்ப அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஆக்கப்பட்ட தீர்ப்புகளாகவும் கட்டளைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம் ;

(7) நியமித்த தேதிக்கு நேர்முந்தி நாளன்று கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையின் எல்லா அக்கறைகளும் உரிமைகளும் சொத்துக்களும் கடப்பாடுகளும் தனிசுகளும் அத்துடன் பொறுப்புகளும் நியமித்த தேதியிலிருந்து அதிகாரசபையின் அக்கறைகளாகவும், உரிமைகளாகவும், சொத்துக்களாகவும், கடப்பாடுகளாகவும் தனிசுகளாகவும் அத்துடன் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(8) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று கடல்சார் தீழ்ப்புத் தடை அதிகாரசபையால் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் ஒழுங்குவிதிகளும் நியமித்த தேதியிலிருந்து அதிகாரசபையின் விதிகளாகவும் ஒழுங்குவிதிகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

**61.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**62.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினாலன்றி —

"வேறு ஏதேனும் ஆதனம்" என்பது, கரையோரத்துடன் நிரந்தரமாகவும் முன்னத்துடனும் இணைக்கப்படாத ஏதேனும் ஆதனம் என்று பொருள்படுவதுடன் ஆபத்திலுள்ள கப்பற் கட்டணத்தையும் உள்ளடக்கும் ;

"உந்துகோல்" என்பது, மிதவை என்ற வகையிலாயினுஞ்சரி இயந்திர சக்தி என்ற வகையிலாயினுஞ்சரி சுய உந்து விசையின் வழிவகைகள் எதுவும் அற்றதும், இழுத்துச் செய்யப்படவேண்டியுள்ளதும் அல்லது அலையின் அல்லது நீரோட்டத்தின் செல்வாக்கின்கீழ் இழுத்துச் செல்லப்படுவதற்கு விடப்படுவதுமான ஒரு கட்டமைப்புப் பொறி என்று பொருள்படும் என்பதுடன் ஒரு பாரமற்ற அல்லது அதனையொத்த ஏதேனும் கலத்தையும் உள்ளடக்கும் ;

"கப்பல் எரிபொருள் நிரப்புதல்" என்பது, கடல்சார் சூழலில் எண்ணெயை, எண்ணெய் எரிபொருளை அல்லது ஏதேனும் எண்ணெய்த் தன்மையுள்ள கலவையை இடம் மாற்றுதல் என்று பொருள்படும் ;

"மத்திய சூழல் அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொருள்படும் ;

"இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்" என்பது, 1961ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும் ;

"வகுப்பாக்கச் சங்கம்" என்பது —

(அ) கப்பல்களுக்கும் கடலூர்திகளுக்கும் அத்துடன் கரைக்கப்பாலுள்ள வேறு நிறவுகைகளுக்கும் பாதுகாப்பு மற்றும் நிர்மாண நியமங்களையும் ;

(ஆ) கப்பல்கள், கடலூர்திகள் மற்றும் கரைக்கப்பாலுள்ள வேறு நிறுவுகைகள் என்பவற்றின் தொழிற்பாட்டு நடைமுறைகளையும்,

தீர்மானிப்பவையும், வெளியிடுபவையுமான வர்த்தக அல்லது அரச செல்வாக்கற்ற சுயேச்சை ஒழுங்கமைப்புகள் என்று பொருள் படும், சுமத்தப்படும் நியமங்களின் மட்டம் வகுப்பாக்க இலக்கத்தினாலும் எழுத்தினாலும் காட்டப்படுகின்றன ;

"கரையோர வலயம்" என்பது, 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"எதிர்பாரா சம்பவத் திட்டம்" என்பது, கடல்சார் சூழலுக்குத் தீழ்ப்பில் அல்லது உடனிகழக்கூடிய தீழ்ப்பின் அச்சுறுத்துதலில் விளையும் கைத்தொழில் நிறுவுகையின் செயலிழப்பு உட்பட ஏதேனும் இடநேர்வு, சம்பவம், நிகழ்வு அல்லது நிலைமை போன்ற கடல்சார் அவசர கால நிலைமை சார்ந்த சூழல் தீழ்ப்பையும் வேறு தீழ்ப்பையும் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் அத்துடன் தடுத்து நிறுத்துவதற்கும் பயனுறுதியுள்ள எதிர்ச் செயலாற்றும் ஆற்றலுள்ள ஒழுங்கமைப்பு சார்ந்த வரைச் சட்டம் ஒன்றைப் பேணுவதற்கும் தொடர்புடைய நிதியளிப்பையும் உபகரணத்தையும் பயிற்சித் திட்டங்களை முகாமைசெய்வதற்குமான ஒரு திட்டம் என்று பொருள்படும் ;

"ஒப்பந்தக்காரர்" என்பது, 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"வணிகக் கப்பற்தொழில் பணிப்பாளர்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் ஆள் என்று பொருள்படும் ;

"வெளியேற்றல்" என்பது, தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்கள் அல்லது அத்தகைய பதார்த்தங்கள் அடங்கிய கழிவு தொடர்பில் ஒரு கப்பலிலிருந்து அல்லது வேறு ஏதே

னும் மூலவளத்திலிருந்து ஏற்படுத்தப்படும் ஏதேனும் வெளியேற்றம் என்பதுடன் ஏதேனும் கசிவு, கையுதிர்ப்பு, சிந்துதல், ஒழுக்கு, குழாய்வழி வெளியேற்றம், வெளிப்பாடு அல்லது வெறுமைப்படுத்துதல் என்பதனையும் உள்ளடக்கும் ;

"கொட்டுதல்" என்பது, கழிவை அல்லது வேறுபொருளை வேண்டுமென்றே கடலினுள் கையுதிர்த்தல் என்று பொருள்படும் என்பதுடன் ; போடுதல், எறிதல், வீசுதல் அல்லது படியவிடுதல் என்பதனையும் உள்ளடக்கும் அத்துடன் "கொட்டு" என்பது அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும் ;

"சூழல்" என்பது, நிலம், மண், நீர், வளிமண்டலம், சுவாத்தியம், சப்தங்கள், மணங்கள், சுவைகள் மற்றும் ஒவ்வொரு விவரணத்தையும் சேர்ந்த விலங்குகளினதும் தாவரங்களினதும் உயிரியல் காரணிகள் என்பன உட்பட மனித இனத்தின் சூழலில் பௌதிகக்காரணிகள் என்று பொருள்படும் ;

"கரைமுனங்கு" என்பது, சராசரி உயர் நீர்ப்பரப்பிற்கும், சராசரி தாழ் நீர்ப்பரப்பிற்கும் இடைப்பட்ட கடல்சார் கரை இடப்பரப்பு என்று பொருள்படும் ;

"தீங்குவிளைவிக்கும் பதார்த்தம்" என்பது, கடலினுட் செலுத்தப்படுமாயின் மனித சுகாதாரத்திற்குத் தீங்குகளை உருவாக்கும், உயிர்வாழும் மூலவளத்திற்கும் கடல்வாழ் உயிர்களுக்கு ஊறுவிளைவிக்கும், கடலின் வசதிகளை சேதப்படுத்தும் அல்லது கடலின் வேறு சட்டபூர்வமான பாவனையுடன் தலையிடும் சாத்தியமுள்ள ஏதேனும் பதார்த்தம் என்று பொருள்படும் என்பதுடன் இச்சட்டத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைந்த ஏதேனும் பதார்த்தத்தையும் உள்ளடக்கும் ;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருக்கும் ;

"சம்பவம்" என்பது, தீழ்ப்பு தொடர்பில் சேதம்விளைவிக்கும் அதே தொடக்கத்தைக் கொண்ட ஏதேனும் நிகழ்வு அல்லது எவையேனும் தொடர் நிகழ்வுகள் என்று பொருள்படும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையால் அல்லது பிரதேச சபையால் பிரயோகிக்கப்படுபவையும் நிறைவேற்றப்படுபவையும், புரியப்படுபவையுமான தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் என ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"சராசரி உயர் நீர்க்கோடு" என்பது, சராசரி கடல் மட்டத்திலிருந்து ச.க. 0.6 மீட்டர் என்று பொருள்படும் ;

"சராசரி தாழ் நீர்க்கோடு" என்பது, சராசரி கடல் மட்டத்திலிருந்து ச.ய. 0.6 மீட்டர் என்று பொருள்படும் ;

"கடல்சார் சூழல்" என்பது, மனித இனத்தினைச் சூழவுள்ள காரணிகள் எனவும், சட்டத்தால் வரைவிலக்கணம் உறப்பட்ட வாறு கடல்சார் சூழல் கோளுக்குட்பட்ட நிலம், எண்ணெய், வளிமண்டலம், சுவாத்தியம், சப்தம் மற்றும் மணம் உட்பட ஒவ்வொரு விவரணத்தையும் சேர்ந்த விலங்குகளையும் தாவரங்களையும் பயனுறுத்தும் உயிரியல் செயற்பாடுகள் எனவும் பொருள்படும் ;

"கடல்சார் அவசரகால நிலைமை" என்பது, எத்தன்மையதாக ஏற்படுத்தப்படினும் எண்ணெயால் கடல்சார் சூழலுக்கு கணிசமான தீழ்ப்பை அல்லது உடனிகழக்கூடிய கணிசமான தீழ்ப்பின் அச்சுறுத்துதலை விளைவிக்கும் ஏதேனும் இடநேர்வு, சம்பவம், நிகழ்வு அல்லது நிலைமை என்று பொருள்படும் ;

"கடல்சார் இடநேர்வு" என்பது, கப்பலொன்றுக்கு அல்லது அதன் சரக்கிற்கு முக்கியமான சேதத்தை அல்லது உடனிகழக்கூடிய முக்கியமான சேதத்தை விளைவிக்கும் கப்பல்களின் மோதல், தேக்கம் அல்லது வேறு கடல்சார் செலவு சம்பவம் அல்லது கப்பலொன்றில் அல்லது அதற்கு வெளியே வேறு நிகழ்வு என்று பொருள்படும் ;

"கடலோர வலயங்கள் சட்டம்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டம் என்று பொருள்படும் ;

1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கடலோர வலயம் என்பதுடன் மேற்படிச் சட்டத்தின் நியதிகளின்படி பிரகடனத்தினால் வெளிப்படுத்தப்பட்ட —

(அ) அடுத்துள்ள வலயம் ;

(ஆ) பிரத்தியேகப் பொருளாதார வலயம் ;

(இ) கண்டமேடு ; அத்துடன்

(ஈ) தீழ்ப்புத் தடை வலயம்,

என்பனவும் மேற்படிச் சட்டத்தின்கீழ் வருங்காலத் தேதியொன்றின் வெளிப்படுத்தப்படக்கூடிய வேறு ஏதேனும் வலயத்தையும் உள்ளடக்கும் ;

"கப்பற் தலைவன்" என்பது, கப்பலொன்றின் தொடர்பில் கப்பலோட்டி ஒருவரைத் தவிர அப்போதைக்கு ஏதேனும் கப்பலின் ஏவலை, பொறுப்பை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒவ்வோராளையும் உள்ளடக்கும்;

"நஞ்சுத் தன்மையுள்ள திரவப் பதார்த்தம்" என்பது, 1973ஆம் ஆண்டின் பின்னேட்டினால் MARPOL 73/78 திரிபுபடுத்தப்பட்டவாறு அல்லது அதன் அ, ஆ, இ அல்லது ஈ என்னும்பிரிவிற்குட்படுகின்றவாறு MARPOL 73/78இன் 3(4) ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளின்கீழ் தற்காலிகமாக மதிப்பீடு செய்யப்பட்டவாறு கப்பல்

களிலிருந்து தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேச சமவாயத்தின் பின்னிணைப்பு II இற்கான பிற்சேர்க்கை II இல் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருள்படும் ;

"இருப்பாட்சியாளர்" என்பது, இடமொன்றை உள்ளவாறாகவே இருப்பாட்சி செய்யும் ஆள் அல்லது அத்தகைய ஆளொருவர் இல்லாவிடில் அதன் சொந்தக்காரர் என்று பொருள்படும்;

"கரைக்கப்பாலுள்ள நிறுவுகை" என்பது, —

(அ) இலங்கையின் கடற்படுக்கை மற்றும் ஆள்புல நீர்ப் பரப்புகளின் அடி மண் என்பவற்றில், அவற்றின் மீது அல்லது அவற்றின்மேல் நிர்மாணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட அல்லது கடலோர வலயங்கள் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட அதன் கரைமுனங்கில் அல்லது கரையோர வலயத்தில் வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அல்லது அதன்மீது பயன்படுத்தப்படும் ஏதேனும் நிறுவுகை அல்லது உபாயம் (நிரந்தரமானதாயினுஞ்சரி தற்காலிகமானதாயினுஞ்சரி) ;

(ஆ) கடல்சார்படுக்கை மற்றும் அடிமண் அல்லது கண்டமேடை என்பவற்றில் அல்லது அவற்றின் மேல் அதன் இயற்கை வளங்களின் தேடிப்பெறல் தொடர்பில் நிர்மாணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நிறுவுகை அல்லது உபாயம் (நிரந்தரமானதாயினுஞ்சரி, தற்காலிகமானதாயினுஞ்சரி) ;

(இ) மிதக்கும் எதுவும் (கப்பலொன்றைத் தவிர) அது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளின் கடற்படுக்கையிலும் அல்லது கரையிலும் அத்துடன் வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது கரையோர வலயத்தில் நங்கூரமிடப்பட்டிருப்பின் அல்லது அதனோடு

இணைக்கப்பட்டிருப்பின் அல்லது கண்டமேடையின் நீர்ப்பரப்பின் படுகையின் இயற்கைவளங்களின் நுண்ணாய்வு மற்றும் அவற்றைத் தேடிப் பயன்படுத்துதல் தொடர்பில் அங்கே நங்கூரமிடப் பட்டிருப்பின் ;

(ஈ) ஏதேனும் விஞ்ஞான ஆய்வு நடவடிக்கை தொடர்பில் இலங்கையின் கடல்சார்படுக்கையில் மற்றும் ஆள்புல நீர்ப்பரப்புகளின் அடி மண் என்பவற்றில் அவற்றின்மீது அல்லது அதன்மேல் நிர்மாணிக்கப்பட்டு, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் அல்லது கண்டமேடையின் மேலான கடலோர வலயத்தில் அதன் கரைமுனங்கில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் நிறுவுகையை அல்லது உபாயத்தை.

உள்ளடக்கும்.

"எண்ணெய்" என்பது, சுத்திகரிக்கப்படாத எண்ணெய், எரிபொருள், எண்ணெய், சேற்றுக் களிமண், எண்ணெய்க் கழிவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் உட்பட ஏதேனும் வடிவத்திலான பெற்றோலியம் என்று பொருள்படும் ;

"எண்ணெய் எரிபொருள்" என்பது, எந்தக் கப்பலில் எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகின்றதோ அந்தக் கப்பலின் உந்துவிசை மற்றும் துணைப் பொறித்தொகுதி தொடர்பில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் எண்ணெய் என்று பொருள்படும் ;

"எண்ணெய்த் தன்மையுள்ள கலவை" என்பது, ஏதேனும் எண்ணெய்ச் செறிவுடைய கலவை என்று பொருள்படும் ;

"தொழிற்படுத்துநர்" என்பது, கப்பலொன்று தொடர்பில் நேரத்தின் அடிப்படையில் ஒப்பந்த வாடகைக்கு அமர்த்தப்பட்டதாயினுஞ்சரி, கடல்சார் பயணத்தின் அடிப்

படையில் ஒப்பந்த வாடகைக்கு அமர்த்தப்பட்டதாயினுஞ்சரி, உரிமை மாற்றத்தின் அடிப்படையில் ஒப்பந்த வாடகைக்கு அமர்த்தப்பட்டதாயினுஞ்சரி ஒப்பந்த வாடகைக்கு விடுநர் ஒருவரை உள்ளடக்கும் ;

"சொந்தக்காரர்" என்பது கப்பலொன்றின் தொடர்பில் சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்பட்ட ஆள் அல்லது பதிவு இல்லாதவிடத்து கப்பலைச் சொந்தமாகக் கொண்டிருக்கின்ற அல்லது உடைமையில் வைத்திருக்கின்ற ஆள் என்று பொருள்படும் ;

"பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை" என்பது 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"குழாய் இணைப்பு" என்பது எண்ணெயை, வெள்ள நீரை, கழிவை, குப்பையை மற்றும் வேறு தீழ்ப்பாக்கிகளை கடத்துவதில் பயன்படுத்தப்படும் இயற்கையான அல்லது செயற்கையான (மனிதனால் ஆக்கப்பட்டது) திறந்துள்ளவையும் மூடியவையுமான வாய்க்கால்களை உள்ளடக்கும் ;

"தீழ்ப்பாக்கி" என்பது இச்சட்டத்தின் நோக்கத்திற்கு ஒரு தீழ்ப்பாக்கியாக அமைச்சரால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் அல்லது பதார்த்தங்களின் ஒரு வகுப்பின் பகுதியொன்று எனப் பொருள்படும் என்பதுடன் கருச்சக்திக் கழிவு, திரவ, திண்ம அல்லது வாயு வடிவத்தில் ஏதேனும் நன்மைபயக்கும் பயன்பாட்டை பாதகமாகப் பாதிக்கும்வகையில் ஏற்கும் சூழலின் ஏதேனும் பிரிவின் அல்லது மூலக்கூற்றின் அத்தகைய பாதிப்பதும் அல்லது சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிப்பதுமான அல்லது ஊறுவிளைவிக்கும் சாத்தியமுள்ளதான அத்தகைய பதார்த்தத்தால் களங்கப்படுத்தப்பட்ட ஏதேனும் கழிவையும் உள்ளடக்கும் ;

"தீழ்ப்பு" என்பது நன்மைபயக்கும் பயன்பாட்டைப் பாதகமாகப் பாதிக்கும் வகையில் அல்லது பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் அல்லது விலங்குகள், பறவைகள், வனசீவராசிகள், நீர்வாழ் உயிரினங்கள் என்பவற்றின் நலனுக்கு அல்லது ஒவ்வொரு விவரணத்தையும் சேர்ந்த தாவரங்களுக்கு ஊறுவிளைவிக்கின்றதும் அல்லது ஊறுவிளைவிக்கும் சாத்தியமுள்ளதும் கடல்சார்தொழில் உட்பட கடற் செயற்பாட்டிற்கும் கடலின் வேறு சட்டபூர்வமான பயன்களுக்கும் தடையாக அமைவதும் கடல்நீர் பாவனையின் தரத்தை சேதப்படுத்துவதுமான ஒரு நிலைமையை ஏற்படுத்தும் வகையில் ஏதேனும் பதார்த்தம் அல்லது சக்தி மனிதனால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உட்செலுத்தப்படுதல் உட்பட கழிவுகள் வெளியேற்றப்படுவதால், வெளிப்படுத்தப்படுவதனால் அல்லது படியவிடப்படுவதனால் கடற் சூழலின் ஏதேனும் பகுதியின் பெளதிக, வெப்ப, உயிரியல் அல்லது கதிரியக்கப் பண்புகளின் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான மாற்றம் என்று பொருள்படும் ;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் அத்தியாயம் XVII அ என்பதனால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருள்படும் ;

"அழிவுமீட்பு" என்பது கப்பல் செல்லத்தகு நீரில் அல்லது வேறு எவையேனும் நீர்ப்பரப்புகளில் ஆபத்திலுள்ள கலம் ஒன்றுக்கு அல்லது வேறு உடைமைக்கு உதவிபுரிவதற்கென பொறுப்பேற்கப்படும் ஏதேனும் செயல் அல்லது செயற்பாடு என்று பொருள்படும் ;

"கப்பல்" என்பது கடற்சூழலில் கடற் செலவில் பயன்படுத்தப்படும் நீர்கலப் படகுகள், வான் மெத்தை, வாகனங்கள், அமிழக்கூடியன, மிதக்கும் ஊர்தி, நிலையான அல்லது மிதக்கும் மேடைகள், எண்ணெய்ப் பாய்மரக் கட்டுகள் என்பன உட்பட ஏதேனும் கலம் அல்லது படகு அல்லது வேறு ஏதேனும் விவரணத்தைச் சேர்ந்த கப்பல் என்று பொருள்படும் ; என்பதுடன் கடல்சார் சூழலில்

கடற்செலவுக்கும் அத்துடன் கப்பலின் அலுவல்களைக் கொண்டு நடத்துவதற்கும் அவசியமான வாழ்வாதாரத்திற்கான வழங்கல்கள் தவிர்த்து எல்லா உபகரணங்களையும் ஆடைகளையும் சேர்மானங்களையும் உள்ளடக்கும்.

"இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"முடிவிடம்" என்பது (எண்ணெய் முடிவிடம் உட்பட) கலங்கள் நிர்மாணிக்கப்படும், மீள் நிர்மாணம் செய்யப்படும், பழுதுபார்க்கப்படும், மீள் நிரப்பப்படும், மெருகூட்டப்படும் அல்லது உடைக்கப்படும் இறங்குதுறை, பாலம் அல்லது நோறோ மிதவை, சாலை அல்லது துறைமுக மேடை (அதன் சூழிடம் உட்பட) என்று பொருள்படும் ;

"இடமாற்றம்" என்பது எண்ணெய் அல்லது ஏதேனும் தீழ்ப்பு தொடர்பில் மொத்தமான இடமாற்றம் செய்தல் என்று பொருள்படும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்